Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு +IV = பதினாறு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்டுகளுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 13, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038 (சி/2485)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆகிர் 03 (23.05.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 234

# புலிகள் மீதான தடையை இந்தியா மேலும் நீடித்தது!

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இந்தியாவில் விதிக்கப்பட்டுள்ள தடை மேலும் இரண்டு வருட காலத்துக்கு நீடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசின் இந்த உத்தரவை, தமிழக அரசு நேற்று வெளியிட்டது. இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

சமீபத்தில் தமிழகத்திற்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருக்கின்றனர். இவர்கள் சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கையில் ஈடுபடக்கூடும் என நம்புவதற்கு இடமிருக்கிறது.

கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாக இந்த இயக்கம் தடைசெய்யப்பட்டிருந்தாலும், புலிகள் இயக்கத்துக்கு விசுவாசமானவர்கள் தொடர்ந்தும் இந்த இயக்கத்துக்கு ஆதரவு தெரிவித்துவந்துள்ளனர்.

மேலும், விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டை ஒரு தளமாகப் பாவித்துக்கொண்டு பெற்றோல், டீசல், மருந்துப் பொருட்கள் ஆகியவற்றைக் கடத்திச் செல்கின்றனர்.

இந்த இயக்கம் மிகவும் வலிமையான இயக்கமாகச் செயற்பட்டு வருவதன் காரணமாக, இந்தியாவில் பிரிவினைக்கு ஊக்கம் பிறக்கும் என்று மத்திய அரசு நம்புகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவின் புதிய பிரதமராக மன்மோகன் சிங் பதவியேற்பு!



(புதுடெல்கி)

இந்தியாவின் 14 ஆவது புதிய பிரதமராக சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த சீக்கிய இனத்தவரான மன்மோகன் சிங் நேற்றுப் பதவியேற்றார். இந்தியாவின் பிரதமராக பதவியேற்ற இவர் முதல் சீக்கியராவார். அத்துடன் இவர் முன்னாள் நிதியமைச்சருமாவார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று மாலை நடந்த பதவியேற்பு வைபவத்தில் ஜனாதிபதி அப்துல்கலாம், மன்மோகன்சிங்கிற்கு பதவிப் பிரமாணமும், இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதி கே. ஆர். நாராயணன், பிரதமர் பதவியிலிருந்து விலகிச் செல்லும் வாஜ்பாய், முன்னாள் பிரதமர்கள் வி.பி.சிங், சந்திரசேகர், குஜ்ரால், நரசிம்மராவ், தேவகௌடா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நடந்து சென்ற சிப்பாய் மீது மோட்டார் சைக்கிள் மோதியது!

### சாரதியும், சிப்பாயும் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கைதடியில் நடந்துசென்று கொண்டிருந்த இராணுவச் சிப்பாய் மீது, பின்புறமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் - மோட்டார் சைக்கிளில் சென்ற நபரும் இராணுவச் சிப்பாயும் படுகாயமடைந்தனர்.

இந்தச்சம்பவம் நேற்று மதியம் கைதடிப் பாலத்தில் இடம்பெற்றது. இச்சம்பவத்தின் போது, சிவன்கோவில நல்லூரைச் சேர்ந்த செந்தில்நாதசர்மா (வயது 23) என்பவரே மோட்டார். சைக்கிளை ஓட்டிச் சென்று சிப்பாய் மீது மோதியதில் படுகாயமடைந்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக, மேலும் தெரிய வருவதாவது -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுடன் பேச்சு நடத்த இலங்கை – பங்களாதேஷ் விருப்பம்

(கொழும்பு)

புதிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இந்தியாவிடம் கோரிக்கை விடுத்திருப்பதாக தெரியவருகிறது.

இதன்படி பங்களாதேஷின் வெளிவிவகார அமைச்சர் மொசேட்கான் டெல்கியில் பேச்சுவார்த்தை நடாத்த தம்மை அழைக்குமாறு இந்தியாவிடம் கேட்டுள்ளார். இதேபோலவே இலங்கைப்பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் இவ்வாறான ஒருகோரிக்கையை இந்தியாவிடம் முன்வைத்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தின் ஒத்துழைப்புடனேயே புலிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது!

## கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள ஆலங்கேணியில் வைத்து விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மீது கடந்த வியாழக்கிழமை இரவு நடத்தப்பட்ட தாக்குதல் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடனேயே மேற்கொள்ளப்பட்டதாக விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.**

**இது தொடர்பாக மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவிக்கையில் -**

இந்தத்தாக்குதல் இராணுவத்தினரின் முழுமையான ஒத்துழைப்புடனேயே மேற்கொள்ளப்பட்டது. இந்தச்சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது எனத் தெரிவித்தார்.

புலிகள் இயக்கப் போராளிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட இடம், புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் - அங்கிருந்து சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பாலேயே மாங்கேணியில் இராணுவமுகாம் ஒன்று அமைந்துள்ளது.

பெண்டுகள்சேனையில் இருந்து வாகரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான நாகேசை இலக்கு வைத்தே ஆலங்கேணியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

கடந்த வியாழனன்று இரவு 10 மணிக்கு இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் கிளைமோர் வெடிக்க வைக்கப்பட்டதுடன், எல்.எம்.ஜி துப்பாக்கியாலும் சுடப்பட்டதாக புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத்தாக்குதல் சம்பவத்தில், கோகுலன் அல்லது றோகிதன் என்ற போராளி உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒரு போராளி காயமடைந்தார்.

ஆலங்கேணிப் பகுதியில் இராணுவத்தினர் ஊடுருவி மறைந்திருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்திருந்தனர். இவர்களின் ஒத்துழைப்புடனேயே இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் மீது நடத்தப்பட்ட நான்காவது தாக்குதல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - மேற்படி தாக்குதல் சம்பவத்தில் வீரச்சாவடைந்த கோகுலன் என்ற போராளியின் வித்துடல் தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று விதைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ham Foundation
vanaham.org

(12 ஆம் பக்கம் பார்க்க)

**ஆலங்கேணியில் வைத்து விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மீது கடந்த வியாழக்கிழமை இரவு நடத்தப்பட்ட தாக்குதல் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடனேயே மேற்கொள்ளப்பட்டதாக விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.**

**இது தொடர்பாக மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவிக்கையில் -**

இந்தத்தாக்குதல் இராணுவத்தினரின் முழுமையான ஒத்துழைப்புடனேயே மேற்கொள்ளப்பட்டது. இந்தச்சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது எனத் தெரிவித்தார்.

புலிகள் இயக்கப் போராளிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட இடம், புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் - அங்கிருந்து சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பாலேயே மாங்கேணியில் இராணுவமுகாம் ஒன்று அமைந்துள்ளது.

பெண்டுகள்சேனையில் இருந்து வாகரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான நாகேசை இலக்கு வைத்தே ஆலங்கேணியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

கடந்த வியாழனன்று இரவு 10 மணிக்கு இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் கிளைமோர் வெடிக்க வைக்கப்பட்டதுடன், எல்.எம்.ஜி துப்பாக்கியாலும் சுடப்பட்டதாக புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத்தாக்குதல் சம்பவத்தில், கோகுலன் அல்லது றோகிதன் என்ற போராளி உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒரு போராளி காயமடைந்தார்.

ஆலங்கேணிப் பகுதியில் இராணுவத்தினர் ஊடுருவி மறைந்திருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்திருந்தனர். இவர்களின் ஒத்துழைப்புடனேயே இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் மீது நடத்தப்பட்ட நான்காவது தாக்குதல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - மேற்படி தாக்குதல் சம்பவத்தில் வீரச்சாவடைந்த கோகுலன் என்ற போராளியின் வித்துடல் தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று விதைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவுடன் பேச்சு நடத்த இலங்கை – பங்களாதேஷ் விருப்பம்

(கொழும்பு)

புதிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இந்தியாவிடம் கோரிக்கை விடுத்திருப்பதாக தெரியவருகிறது.

இதன்படி பங்களாதேஷின் வெளிவிவகார அமைச்சர் மொசேட்கான் டெல்கியில் பேச்சுவார்த்தை நடாத்த தம்மை அழைக்குமாறு இந்தியாவிடம் கேட்டுள்ளார். இதேபோலவே இலங்கைப்பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் இவ்வாறான ஒருகோரிக்கையை இந்தியாவிடம் முன்வைத்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகள் குறித்துப் பேச

# இன்னும் இரண்டு வாரங்களுக்குள் இந்தியா செல்லவிருக்கிறார் ரணில்!

(கொழும்பு)

முன்னாள் பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இன்னும் இரண்டு வாரங்களுக்குள் இந்தியாவுக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

இந்திய அரசியல் தலைவர்களுடன் முக்கிய பேச்சுக்களை நடத்தும் நோக்கிலேயே ரணில் விக்கிரமசிங்க புதுடெல்கி செல்லவிருப்பதாகத் தெரியவருகிறது.

புதிதாக இந்தியாவில் ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருக்கும் காங்கிரஸ் கட்சிக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் வகையில் - நேற்று முன்தினம் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்திக்கு ரணில் விக்கிரமசிங்க தொலைபேசி மூலம் வாழ்த்துத் தெரிவித்தார்.

இந்தத் தொலைபேசி உரையாடலின்போது- இரு தலைவர்களும் பல்வேறு விடயங்கள் குறித்துப் பேசியதாகவும் - இதன்போதே ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்துக்கான இறுதித்தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இன்னும் இரண்டு வாரங்களுக்குள் புதுடெல்கி செல்லும் ரணில் விக்கிரமசிங்க - சோனியா காந்தி, புதிய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் மற்றும் பல்வேறு இராஜதந்திரிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்.

இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் குறித்தே எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின்போது முக்கியத்துவம் கொடுத்துப் பேசப்படும் எனவும் தெரியவருகிறது. (01)

## கிறிஸ்பற்றனை சந்திக்க கதிர்காமர் பயணம்!

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்திடம் இருந்து நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியின் ஒரு கட்டமாக - வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையாளர் கிறிஸ்பற்றனுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இதற்காக இன்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பெல்ஜியத்தின் தலைநகர் பிரஷெல்சுக்கு பயணமாகவுள்ளார்.

புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர், ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுடன் நடத்தப்படவிருக்கும் முதலாவது உத்தியோகபூர்வ சந்திப்பாக இது இருக்கும்.

சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்தைப் பொறுத்தே - இலங்கைக்கு சர்வதேச நிதியுதவிகளைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்று ஐரோப்பிய யூனியன் ஏற்கனவே அறிவித்திருக்கிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)




நீண்டநாள் உங்கள் எதிர்பார்ப்பினை 120 நிமிடங்களில் நாங்கள் எமது மண்ணில் நிறைவேற்றுகின்றோம்

நிலா பதிப்பகம்

சகல விதமான அளவுகளிலும் கலர் பிரித்தல் செய்து கொடுக்கப்படும் (COLOUR SEPARATION) சேவையினை அதிவேகமான முறையில் மிகக்குறைந்த செலவில் செய்து வழங்குகின்றோம்.

- 4X8 அளவுகளில் PCC கலர் பிறின்ட் சேவை (4x8 SIZE PCC COLOUR DIGITAL PRINT)
- 4X8 அளவுகளில் COOL & HOT மென்காப்பிடுகை சேவை 4x8 SIZE COOL & HOT LAMINATING SERVICE
- அழுத்திப் பதித்தல் சேவை HOT IMPOSING (GOLD & SILVER PRINT SERVICE)
- கலண்டர் கிளிப் போடுதல் (SPIRAL CLIP & MATERIAL CLIP) SERVICE



பிரதான சாலை, கிளிநொச்சி.
தொலைபேசி: 021-2285935
தொலைநகல்: 021-228 5935


zed by Noolaham Foundation.
aham.org | aavanaham.org

11 வது அகவையில் தடம் பதிக்கும் தமிழீழ
வைப்பகத்தினை மென்மேலும் வளர வாழ்த்துகிறோம்.

"மடிமடிக்கொண்டொழுகும் பேதைபிறந்த
குடிமடியும் தன்னினும் முந்தி"

**இலட்சுமிதேவி பந்தல்சேவை**
(அண்ணா கடை)

குறுக்குவீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

உரிமையாளர்.
திரு.செ.முருகையா

(சி/2576)

**சிறு விளம்பரம்**

யாழ்.நகரில் விற்பனைப் பிரதிநிதியாகக் கடமைபுரிபவர்களுக்கு யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் சகல வசதிகளுடன் அறை ஒன்று உடனடியாகத் தேவை. தொடர்பு -M.S.சந்திரஜோதி, தொலைபேசி இல.0777-301394 (737)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
20.05.2004 முதல்
பிரபு, குஷ்பு, நெப்போலியன் நடித்த
**மறவன்**
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45(பு.நே.)
**SLIVER**
(சி-2386)

**நாகம்ஸ்** சுன்னாகம்
5 ஆவது வெற்றிவாரத்தை நோக்கி
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
டொல்பி ஒலியமைப்புடன்
விக்ரம், ஜோதிகா,
கபாலி, வடிவேலு
நடித்த
**அருள்**
(சி-2397) (றீல்ஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

மே 7 முதல் அருள் திரைப்படம் திரையிடப்படும் இறுதிநாள் வரையான நுழைவுச் சீட்டுக்களை ரசிகர்களே பாதுகாத்துக்கொள்ளுங்கள்.
குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் மூன்று ரசிகர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.
1 ஆம் பரிசு - துவிச்சக்கரவண்டி
2 ஆம் பரிசு - C.D பிளேயர் ஒசாக்கி
3 ஆம் பரிசு - மேசை மின் விசிறி
26.05.2004 முதல் **எதிரி**

**ராஜா** யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின்,
திரிஷா நடித்த
**ஆய்த எழுத்து**
(சி-2387)
காட்சிநேரம்:-10.30,2.30,6.30,9.30 (பு.நே)

**நீ வாழ வாழ்த்துகின்றோம்**

தமிழீழ வைப்பகம் BANK OF TAMILEELAM



தமிழீழத்தின் சுடர் ஒளியே
தமிழீழ வைப்பகமே!
அகவை பத்தில் தடம் பதிக்கும்
அருமையான எம் தோழனே
விவசாயி துயர் துடைத்து
வளமாக அவர் வாழ
உரமிட்ட உத்தமனே
உன் பணி சிறக்கவேண்டும்
கொட்டும் முரசொலியில்
எட்டுத் திக்கும் உன்புகழ்
ஓங்கி ஒலிக்க வேண்டும்
தரணியின் நாயகனாய்
தலைநிமிர்ந்து நீ
தடம் பதித்து வரவேண்டும்.



உன்பணி தொடர வாழ்த்தும்
உனது பயனாளிகளான
கிளிநொச்சி மாவட்ட கமக்காரர்
அமைப்புக்களின் சம்மேளனம்.

**பத்தாண்டு விழாக்காணும் தமிழரின் வைப்பகமாம்**

தமிழீழ வைப்பகம் பெரும் தருவாய்
விழுதெறிய வாழ்த்துகின்றோம்

**யாழ் மண்ணில் இல்லத்தரசிகளின் இதயம்
கவர்ந்து சுவை நாடிகளின் நாவில் இடம்பிடித்து
தரமான உணவாக்கத்திற்குரிய அரிசிகள்**

**மாப்பியன் நம்பர் - 01 அரிசி
முருகன் அரிசி
மேனாட்டு உணவுக்கான சம்பா அரிசி**





**ஆகியவற்றின் மொத்த சில்லறை விற்பனையாளர்கள்.**

# முருகன் களஞ்சியம்

**திருநெல்வேலி**

(சி/2574)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைக்கொலை சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவு!

(கொழும்பு)

ஆனமடுவ பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற இரட்டைக்கொலை சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்க பண்டாரவைக் கைதுசெய்ய சட்டமா அதிபரின் ஆலோசனையை பொலிஸார் எதிர்பார்த்துள்ளனர்.

இந்தக் கொலைகள் தொடர்பாக கைதுசெய்யப்பட்டுள்ள இருவரும் - தமக்கு கொலைக்கான துப்பாக்கியை பாலித ரங்க பண்டாரவே வழங்கினார் எனத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்டுள்ள இருவரும் நேற்று முன்தினம் ஆனமடுவ நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்ட வேளையில், அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது

# சுமதிபாலவை பிணையில் விட்ட நீதிவானுக்கு எதிராக விசாரணை!

(கொழும்பு)

குடிவரவு - குடியகல்வு குற்றச்சாட்டுக்குள்ளாகியுள்ள இலங்கை கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபாலவை பூரணைதினத்தன்று பிணையில் செல்ல அனுமதித்த மேலதிக நீதிவானுக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பாதாள உலகக்குழுத்தலைவர் ஒருவரை உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளை பார்ப்பதற்காக, போலியான ஆவணங்களைத் தயாரித்து பிரித்தானியாவுக்கு அனுப்பியதாகவே திலங்க சுமதிபால மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் இலங்கையின் விடுமுறை தினமான பூரணை தினத்தன்று, சந்தேக நபரான திலங்க சுமதிபாலவை பிணையில் செல்ல அனுமதித்த குற்றச்சாட்டில் - கொழும்பு மேலதிக நீதிவான் ஆனந்தகமலத் ஆராய்ச்சி மீது குற்றஞ்சுமத்தப்பட்டு அவர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், தற்சமயம் அவருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யபபட்டுள்ளது. இதன் அடிப்படையில், அவருக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

# வவுனியாவில் தொடர்ச்சியாக இடம்பெற்ற குற்றச்செயல்களின் சூத்திரதாரிகள் கைது!

(வவுனியா)

வவுனியா பிரதேசத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த ஆயுதமுனை கொள்ளைகள், வீடுடைப்புக் கொள்ளைகள், கொலைகள், வாகனக் கடத்தல் போன்ற குற்றச்செயல்களில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை, வவுனியா பொலிஸார் கைதுசெய்து விசாரணை நடத்தி வருகின்றார்கள்.

இந்தச் சந்தேக நபர்களினால் கொள்ளையடிக்கப்பட்ட 30 லட்சம் பெறுமதியான தங்க நகைகள், ரொக்கப்பணம், வாகனங்கள் எனபவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளார்கள்.

இதுவரையில் 35 வழக்குகளை பொலிஸார் வவுனியா மாவட்ட நீதிமன்றத்துக்கு தாக்கல் செய்துள்ளனர். வவுனியா பிரதேச மக்களின் நிம்மதியை குலைத்து, சட்டம் ஒழுங்கிற்கு பெரும் சவாலாக இந்தச் சம்பவங்கள் கடந்த வருடம் ஓகஸட் மாதம் தொடக்கம் இந்த வருடம் மார்ச் மாதம்வரை தொடர்ந்து இடம்பெற்று வந்தன.

வவுனியா நகரையும், அதனைச் சூழ்ந்த கிராமப்பகுதிகளில்- பகலிலும் இரவிலுமாக, தொடர்ச்சியாக 60 வீடுடைப்புக் கொள்ளைச் சம்பவங்களும், 6 துப்பாக்கி முனையிலான கொள்ளைகளும், எட்டு கொலைச் சம்பவங்களும் நடைபெற்றன.

இது சம்பந்தமாக 15 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். இவர்களில் 6 பேர் அதிதீவிர குற்றச்செயல்களில் சம்பந்தப்பட்டவர்கள் என்று பொலிஸார் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள்.

இந்தச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த வவுனியா மாவட்ட நீதிவான் இளஞ்செழியன் சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். இது சம்பந்தமாகத் தேடப்பட்ட சந்தேக நபர்களில் மூவர் யாழ்ப்பாணத்தில் பொலிஸாரினால் கைதுசெய்யபபட்டு, வவுனியாவுக்கு கொண்டுவரப்பட்டிருந்தார்கள்.

இவர்களில் இருவர் யாழ். நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள தலா பத்து வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ளதாக தமது விசாரணைகளில் தகவல் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரையில் பொலிஸார் நடத்தியுள்ள விசாரணைகளின் மூலம் முக்கிய குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்ட 3 சந்தேக நபர்கள் படைத்தரப்புடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததாக கண்டறியப்பட்டுள்ளது.

இவை குறித்து வவுனியா பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளது.

இராணுவத்தினருக்கு உதவியாளராகச் செயற்பட்டு வருவதாக கிடைத்துள்ள தகவலை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து, அவர்கள் மூவரையும் கைதுசெய்து வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு, யாழ்.குடாநாட்டின் இராணுவத் தளபதி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், இராணுவ பொலிஸாரின் தலைமையலுவலக கட்டளைத் தளபதி ஆகியோருடாக வவுனியா மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் பிடியர்ணை பிறப்பித்துள்ளார்.

## வதிவிடப் பயிற்சி பெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கு

யுனிசெப்பின் அனுசரணையுடன் 2002 ஆம் ஆண்டு முத்திரை சந்தியிலுள்ள கல்விமேம்பாட்டு நிலையத்தில் நடத்தப்பட்ட 45 நாட்களைக்கொண்ட வதிவிடப் பயிற்சியின்போது, பயிற்சிபெற்ற முன்பள்ளி ஆசிரியைகளை நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் உள்ளூராட்சி திணைக்களத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஞானவேல்ராசா அறிவித்துள்ளார்.

## கடலோசை - 04 வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமா 4 ஆம் அணி மாணவர்களது 'கடலோசை - 04' வெளியீட்டு விழா நாளை நடைபெறவுள்ளது. இதனை விஞ்ஞான பீட பீடாதிபதி குமாரவடிவேலு வெளியிட்டு வைக்கவுள்ளார்.

# கோடைப் பயிர்ச் செய்கைக்கு கந்தளாய் குளத்தில் நீரில்லை

## விவசாயிகள் பாதிப்பு

திருகோணமலை மாவட்டம் கந்தளாய் குளத்தில் உள்ள நீரைப் பயன்படுத்தி, நெற்செய்கை மேற்கொள்ளப்படும் 4700 ஏக்கர் காணிகளுக்கு கோடைச்செய்கை நீரை வழங்க முடியாத நிலையில், நீர்ப்பாசனத்திணைக்களம் இருந்து வருகின்றது.

114 ஆயிரம் ஏக்கர் கன அடி நீரைக் கொள்ளத்தக்கதாக கந்தளாய்க்குளம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு நீர்மட்டத்தின் அளவு குறைவாக இருப்பதன் காரணமாக நெற்செய்கை மேற்கொள்ளமுடியாதநிலை தோன்றியுள்ளது.

இக்குளத்து நீரை நம்பி 2700 ஏக்கர் புராதன செய்கையாளர்களும் 2 ஆயிரம் ஏக்கர் குடியேற்ற செய்கையாளர்களாலும் நெற்செய்கை மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

தற்போது குளத்தின் 26 ஆயிரத்தி 325 ஏக்கர்கள் அடி நீரே இருக்கின்றது. இதனைக் கொண்டு ஆயிரம் ஏக்கர் நிலத்தில் செய்கை மேற்கொள்ளமுடியும்.

இதனால் ஒவ்வொரு செய்கையாளருக்கும் அரை ஏக்கர் வீதம் நெற்செய்கையை கோடை கால செய்கையாக மேற்கொள்வதற்கு, நீர் வழங்க நீர்ப்பாசனத் திணைக்களம் முன்வந்துள்ளது.

38 அடி உயரமான அணைக்கட்டினைக் கொண்டுள்ள குளத்தில் தற்போது 17 அடி உயரத்துக்கு மட்டுமே நீர் காணப்படுகின்றது. இதிலிருந்து தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை - திருகோணமலை நகரத்துக்கு குழாய் நீர் வழங்குவதற்கு தினந்தோறும் 20 ஏக்கர் கன அடி அளவு நீரை பெற்று வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (04)





சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு ஆதரவாக நேற்றுமுன்தினம் திருகோணமலையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஒரு காட்சியை முதற்படத்திலும், ரவூப் ஹக்கீமுடன் முரண்பட்டுக்கொண்டு தனித்து இயங்கத் தீர்மானித்துள்ள திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நஜீப் ஏ மஜீத்தின் கொடும்பாவி எரிக்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

படங்கள் : சசிக்குமார்

## வவுனியா மாவட்டத்துக்கு

# தமிழ் பொலிஸ் அதிகாரிகளை நியமிக்குமாறு கிஷோர் கோரிக்கை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்துக்கு தமிழ் பொலிஸ் அதிகாரிகளை நியமிக்குமாறு, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் - கடந்த வியாழக்கிழமை கொழும்பில் பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வாவைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்தார்.

வவுனியா மாவட்டமானது, தமிழர் வாழும் பிரதேசமாக இருக்கின்றது. அங்கு அரச கரும மொழியாக தமிழ்மொழி இருக்கின்றது. எனவே இங்கு பணியாற்றும் அரச உயரதிகாரிகள் தமிழர்களாகவும், தமிழ் தெரிந்தவர்களாக இருப் பது மிகமுக்கியமானது.

மிகவிரைவில் வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விஜய நாயக்க மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரான மிஸ்கின் ஆகியோர் இடமாற்றம் பெறவிருப்பதாகவும், இவர்களுக்கு பதிலாக மாற்றம் பெறுபவர் தமிழர்களாக இருக்க வேண்டும் என்றும் கிஷோர் கூறியுள்ளார்.

இந்த விடயத்தை தான் கருத்தில் கொள்வதாகவும், நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆராய்வதாகவும், பொலிஸ்மா அதிபர் இந்திரடி சில்வா தெரிவித்ததாக கிஷோர் மேலும் தெரிவித்தார்.

# அனைத்து ஊடகநிறுவனங்களும் மனச்சாட்சிப்படி இயங்கவேண்டும்!

## ஊடகத்துறை அமைச்சர்

ஊடகக் கலாசாரம் வளர்ச்சியடைவதற்கு, அரசாங்க மற்றும் தனியார் துறை ஊடகங்கள் மனச்சாட்சிப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று, ஊடகத்துறை அமைச்சர் றெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார். அரச மற்றும் தனியார்துறை ஊடகங்களின் தலைவர்களுடன் அமைச்சர் றெஜினோல்ட் குரே நடத்திய கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் றெஜினோல்ட் குரே அனைத்து ஊடக நிறுவனங்களும், ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட திட்டம் ஒன்றில் இயங்கவேண்டும்.

பரஸ்பரம், புரிந்துணர்வுடன் கூடியதாக இந்தத் திட்டங்கள் அமைய வேண்டும் என்று தெரிவித்தார். இந்தச் சந்திப்பின்போது, அனைத்து ஊடகத்துறை நிறுவனங்களின் தலைவர்களும் இரண்டு மாதத்துக்கொரு தடவை கூடிப்பேசி பிரச்சினைகளைத் தீர்க்க முடிவு எடுக்கப்பட்டது.

# தரம் ஒன்று மாணவர்களுக்கு காலை உணவு வழங்க ஏற்பாடு

## அடுத்த வருடம் முதல் நடைமுறை

வளர்ச்சியடையாத கிராமப்புற பாடசாலைகளில். தரம் ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் றெஜினோல்ட் குரே - அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் கூட்டத்தில் [illegible] இத்தகவலை வெளியிட்டார். [illegible] மூவாயிரம் பாடசாலைகளில் அமுல்செய்யவுள்ளது. இதற்கு வருடாந்தம் 360 மில்லியன் ரூபா செலவாகும். முதற்கட்டமாக இந்தத் திட்டம் அடுத்த ஆண்டு, 600 பாடசாலைகளில் அமுல்செய்யப்படவுள்ளது.

இலங்கை மருத்துவ ஆராச்சி நிறுவனம் 2002 ஆம் ஆண்டு நடத்திய ஆய்வின்மூலம் - ஐந்து வயதுக்கும், 9 வயதிற்கும் இடைப்பட்ட பாடசாலை மாணவர்களிடையே போசாக்குக் குறைவு காணப்படுவதாக கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, காலை உணவு வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, தெரிவு செய்யப்பட்ட 600 பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அடுத்த வருடம் முதல் மதிய உணவை வழங்குவதற்கு, அரசாங்கம் திட்டமிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகமாக
என்றும் திகழ எமது வாழ்த்துக்கள்

SINGER
சிங்கர் சிறிலங்கா லிமிட்டெட்
HERO HONDA
ஸ்ரபோட் மோட்டார் கம்பனி லிமிட்டெட்
HERO STREEM
பெண்களுக்கான மோட்டார் சைக்கிள்
எஸ்.ரி.சி. ஜெனரல் ரேடிங் காம்பனி
AKIRA
எய்ம்ஸ் லிமிட்டெட்



SINGER

# சீர்மை SEERMAI

கிளிநொச்சி – முல்லை மாவட்ட விற்பனை முகவர்




எம்மிடம் தையல் இயந்திரங்கள், மின் விசிறிகள், குளிர்சாதனப்பெட்டிகள், மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிப்பெட்டிகள், V.C.D, CD, மின்வாயு அடுப்புகள், நீர்ப்பம்பிகள், மின்பிறப்பாக்கிகள், மணிக்கூடுகள், இயந்திரங்கள் அவற்றுக்கான உதிரிப்பாகங்கள் என்பன பெற்றுக்கொள்ளலாம்.

## தையல் இயந்திரம் சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும்

வருவாய்ப்பகுதிச்செயலகம் முன்பாக
யாழ்சாலை, கிளிநொச்சி.

ம.இக்னேசியஸ்

(சி/2564)



தமிழீழ மண்ணின் பொருண்மிய கட்டுமானத்தில்
தமிழீழ வைப்பகத்தின் பணி சிறக்க வாழ்த்துக்கள்

## நிலவில்லா இரவில் உதயமாகும் சூரியன்
## அக்ஸஸ் சோலர்

சூரிய சக்தி முறையிலான மின்சார இணைப்பைக் கொண்டு இன்றே உங்கள் வீட்டை ஒளிபெறச் செய்யுங்கள்.

**ஏன்?**
- பராமரிக்கச் சிரமமில்லை!
- கரி, அழுக்கு, சுத்தமில்லை!
- எரிபொருள் செலவில்லை!
- மின்சாரக்கட்டணம் இல்லவே இல்லை!
- ஆபத்துக்கள் எதுவுமில்லை!
- குப்பி விளக்கு போல குறைந்த வெளிச்சம் இல்லை!
- பெட்டரி சார்ஜ் செய்து தூக்கிக் கொண்டு அலைய வேண்டிய தில்லை!

**எப்படி?**
- வங்கி மூலம் கடன் வசதிகள்
- குறைவான வட்டி வீதம்
- இலகு தவணைமுறைக்கட்டணம்
- இலவச விநியோக சேவை
- சோலர் இணைப்பு இலவசம்
- உத்தரவாத கால குறைவு இல்லை
- இணைப்புக்கான மேலதிக செலவுகள் எதுவும் இல்லை
- விரைவான பழுது பார்த்தல் வேலைகள

**எதற்காக?**
- மின் குமிழ்களை ஒளிர வைக்க
- கறுப்பு, வெள்ளை தொலைக்காட்சி பார்ப்பதற்கு
- வானொலி, கசட் ரேடியோ கேட்பதற்கு
- கணினிகளை இயக்குவதற்கு
- குளிர் சாதனப்பெட்டியை இயக்கு வதற்கு
- பெயர்பலகைக்கு உள்/வெளியில் மின்குமிழ்களை ஒளிர வைக்க

**எமது மேலதிக விற்பனைப்பொருட்கள**
- சகல விதமான கணினி வகைகள்
- சகல விதமான பிறின்டர் வகைகள்
- சகல விதமான கணினி உதிரிப்பாகங்கள
- சகல விதமான இலத்திரனியல் பொருட்கள்

**எமது மேலதிக சேவைகள்**
- விற்பனை
- புதிய மென்பொருட்களை உருவாக்குதல்
- வன் பொருட்களை புதுப்பித்தல்/திருத்த வேலைகள
- கணினி வலைப்பின்னல் அமைப்பை உருவாக்குதல்
- கணினிகளை பராமரித்தலும் சரிபார்த்தலும்.

ACCESS SOLAR

இதோ உங்களுக்கு அருகாமையில் உள்ள எமது சேவை நிறுவனம்...

## இயற்கை விற்பனை நிலையம்
இல. 59, யாழ்சாலை,
கிளிநொச்சி.

Access

(சி/2572)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# தமிழ் அரசியற் கைதிகள் விவகாரம் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆராய்வர்!

(யாழ்ப்பாணம்)

தென்பகுதிச் சிறைகளில் வாடும் தமிழ் அரசியற்கைதிகளின் விடுதலை தொடர்பாக, நடவடிக்கை எடுப்பது குறித்துத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளனர்.

களுத்துறை மற்றும் வெலிக்கடைச் சிறைச்சாலைகளில் வாடும் தமிழ் அரசியற்கைதிகளை, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், எஸ்.சிவனேசன் ஆகியோர் கடந்த வியாழக்கிழமை சென்று பார்வையிட்டனர்.

இவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவுக்கு இது குறித்து தெரியப்படுத்தவுள்ளனர்.

தொடர்ந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில், இந்தக் கைதிகளின் விடுதலை குறித்து ஆராயப்பட்டு, நல்லதொரு முடிவு எடுக்கப்படவிருப்பதாக அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

வெலிக்கடைச்சிறையில் மனைவியும், களுத்துறைச்சிறையில் கணவனும் அடைக்கப்பட்டிருக்கும் ஓர் தம்பதியினரின் நிலை - வேதனையளிப்பதாக அமைந்திருந்ததாகவும், அவர்களது பிள்ளைகள் அநாதை இல்லங்களில் வளர்வதாகவும், இது மிகவும் வேதனையளிக்கக்கூடிய பரிதாபகரமான நிலை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதனைவிட இந்தச் சிறைகளில் வாடும் தமிழ் அரசியற்கைதிகள் பலர் - சித்தப்பிரமை பிடித்த நிலைக்கு ஆளாக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களைச் சிறையில் அடைத்து வைத்திருப்பது மனிதாபிமானமற்ற செயல் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (ப)

# கட்டைப்பிராய் மதகு இடிந்து விழும் நிலையில்!

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியில் உள்ள கட்டைப்பிராய் 3 ஆம் கட்டை மதகு, துவாரம் ஏற்பட்டு இடிந்துவிழும் நிலையிலுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன் இந்த மதகில் ஏற்பட்ட குழி, தற்போது பெரிதாகி அந்த மதகு ஊடாகப் போக்குவரத்து செய்வது தடைப்படக்கூடியநிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த மதகு வழியாகத் தினமும், ஆயிரக்கணக்கான பாரிய வாகனங்கள் சென்றுவரும் நிலையில், இவ்வாறு பாரியகுழி ஏற்பட்டிருப்பதால், இதனூடாகப் பயணம் செய்வோர் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த மதகினைத் திருத்துவதற்குச் சம்பந்தப்பட்ட தரப்பினர் இதுவரையில் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளாமல் இருப்பதால், பொதுமக்கள் அடிக்கடி இந்தக் குழியில் விழுந்து விபத்துக்களைச் சந்தித்து வருகின்றனர். (ப)

# சுவிஸ் நாட்டு அதிகாரிகள் குழுவினர் கல்வித்திணைக்களத்தில் ஆலோசனை

சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் இலங்கைக்கான பிரதிப் பணிப்பாளர் குழுவுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் யாழ்.மேலதிக கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போது, சுவிஸ்நாட்டு அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான பிரதிப் பணிப்பாளர் ரூடொல்ப் பல்காசர், திட்டமிடல் ஆலோசகர் பீற்றர் ஸ்கெமிட், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் செ.மகாலிங்கம், பாடசாலை கட்டடப் பகுதி பொறியியலாளர் சிவானந்தம் ஆகியோர் பங்குகொண்டனர்.

சுவிஸ்நாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் புதிதாக செயற்படுத்தவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

சுவிஸ்நாட்டு அனுசரணையுடன் யாழ்.கல்வி வலயத்தில் - கலட்டி தமிழ்ப் பாடசாலை புனரமைக்கப்பட்டுள்ளது. பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை, டிறிபேக் கல்லூரி, நுணாவில் தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம், மட்டுவில் கமலாசினி மகாவித்தியாலயம், மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தற்போது புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (தீ)

# மாடு வெட்டியவர்களுக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டது

அனுமதிக்கப்படாத இடத்தில் வைத்து மாடு வெட்டியவர்களுக்கு இரண்டாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா இந்தத் தண்டனையை விதித்துள்ளார்.

உரும்பிராய் மேற்கில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தைக் கோப்பாய் பொலிஸார் கையும் மெய்யுமாகப் பிடித்து, நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

குற்றவாளிகளான கதிர்வேல் நகுலேஸ்வரன், சண்முகம் விஜேந்திரன் ஆகிய இருவருக்குமே தலா ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ப)

# சைவநெறி ஆசிரியருக்கான சேவைக்கால பயிற்சிக் கருத்தரங்கு

யாழ்.வலயப் பாடசாலைகளில் சைவநெறி கற்பிக்கும் ஆசிரியருக்கான சேவைக்கால பயிற்சிக் கருத்தரங்கு, இன்று காலை 8.30 மணி முதல் யாழ். வலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் யாழ். வலயப் பாடசாலைகளில் தரம் 6-11 வரையில் சைவநெறி கற்பிக்கும் ஆசிரியர்களில் ஒருவரை தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (58)

# வாகனப் பதிவு ஆவணங்கள் அடுத்த வாரம் யாழ் வரும்

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வாகன சாரதிகளுக்கான சாரதி அனுமதிப்பத்திரங்கள் மற்றும் வாகன ஆவணங்கள் சிலவும் அடுத்தவாரம் கொழும்பிலிருந்து எடுத்துவரப்படவுள்ளதாக, யாழ்.செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பலரது வாகன சாரதி அனுமதிப்பத்திரங்கள் - கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்படவில்லை. அத்தோடு, பலரது வாகனங்களுக்குரிய இலக்கத் தகடுகள், புத்தகங்கள் மற்றும் பல ஆவணங்களும் கிடைக்கப்பெறாத நிலையில் உள்ளன.

இந்த நிலையில், யாழ்.மோட்டார் திணைக்கள உதவி ஆணையாளர் ப.பத்மநாதன் அடுத்தவாரம் கொழும்புக்குச் செல்வதால், அவர் அங்கிருந்து இவற்றை பெற்று வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவை கிடைக்கப்பெற்றதும் பத்திரிகைகள் வாயிலாகத் தகவல்கள் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# வீதி விளக்குகள் அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் நிக்கொட் திட்டத்தின்கீழ் நவீன வீதி விளக்குகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது, வீதி விளக்குகள் பற்றிய விபரங்களும், அமைக்கப்படவேண்டிய இடங்கள் தொடர்பான வரைபடங்களும் யாழ்.மாநகரசபையினரால் மின் சாரசபையினரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தச் செயற்திட்டம் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளும் பணிகள் இலங்கை மின்சாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : த.நிதுசுஜன்
முகவரி : பருத்தித்துறை.

முதலாவது அகவையில்



பெயர் : ப.கபித்தனன்
முகவரி : நெடுந்தீவு.

பத்தாவது அகவையில்



பெயர் : ம.ரிஷான்
முகவரி : சரசாலை.

நாலாவது அகவையில்



பெயர் : ஞா.டினோசன்
முகவரி : நல்லூர்.


# யுனிசெவ் நிறுவன ஆதரவுடன் கல்வி விழிப்புணர்வு வாரம்

கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் கல்வி விழிப்புணர்வு வாரம் ஒன்றை செயற்படுத்தவுள்ளது.

யுனிசெவ் நிறுவன நிதியுதவியுடன் - தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையோடு, இன்றுமுதல் தொடர்ந்து 30 ஆம் திகதிவரை இந்தக் கல்வி விழிப்புணர்வு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதன்போது பாடசாலைகளுக்குச் செல்லாத மற்றும் பாடாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலையில் இணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கிராம மட்டங்களில் பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களின் விபரங்களை அருகிலுள்ள பாடசாலை அதிபர்களுக்கோ அல்லது கிராம அலுவலர்களுக்கோ அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களுக்கோ அறியத்தருமாறு, கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

தற்போது நடைபெற்றுவரும் க.பொ.த. (உ/த) பரீட்சை காரணமாக பல பாடசாலைகளுக்கு விடுமுறையாகவுள்ள சூழ்நிலையிலேயே இந்தக் 'கல்வி விழிப்புணர்வு வாரம்' கடைப்பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (94)

# கடல் வளத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் இழுவைப் படகுகளை தடைசெய்ய முடிவு!

கடல் வளங்களைப் பாதுகாக்கும் நோக்குடன், இழுவைப் படகுகள் மூலமான மீன்பிடித் தொழிலைத் தடைசெய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை வடமாகாண கடற்தொழிலாளர் சங்க சமாசம் மேற்கொண்டு வருகின்றது.

தற்பொழுது குருநகர்ப் பகுதியில் 78 இழுவைப் படகுகளும், வடமராட்சிப் பகுதியில் 52 இழுவைப்படகுகளும், தீவுப்பகுதியில் 2 இழுவைப் படகுகளும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த இழுவைப்படகுகளின் காரணமாக கடல்வளம் பெருமளவு பாதிக்கப்படுவதுடன், மீன்களின் இனப்பெருக்கத்துக்கான சூழ்நிலைகளும் பாதிப்படைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, கடல்வளத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் பாரம்பரிய மீன்பிடித்தல் முறைகளைப் பின்பற்றுமாறு, வடமாகாண கடற்தொழிலாளர் சங்க சமாசம் மீனவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

வடபகுதிக் கடற்பிரதேசங்களில் அவ்வப்போது இந்திய மீனவர்களும் இழுவைப்படகுகளைப் பாவித்து, மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றமையும் தெரிந்தவிடயமே. (94)

# நீராவியடி விநாயகர் அலங்கார உற்சவம்

நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலய அலங்காரத் திருவிழா நாளை 108 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்கள் வரை நடைபெறவுள்ளது.

காலை ஸ்நபன அபிஷேகமும், மாலை வசந்தமண்டபப் பூசையும், சுவாமி வீதியுலா வருதலும் இடம்பெறும்.




நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தின் பான்ட் வாத்திய அங்குரார்ப்பண வைபவத்தின்போது எடுக்கப்பட்ட படம். (127)

# யாழ். மாநகர சபையிலிருந்து 29 ஊழியர்கள் இடமாற்றம்

உள்ளூராட்சி மன்றங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் இடமாற்றங்களைத் தொடர்ந்து யாழ்.மாநகரசபையில் கடமையாற்றிய 29 ஊழியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர்.

யாழ்.மாநகரசபையின் எழுதுநர்களாக கடமையாற்றிய என்.சோதிலிங்கம், சே.சரவணபவன், கே.பூபாலப்பிள்ளை, ஜீ.மனோன்மணி, எ.குருநாதன், பீ.ராமநாதன், ஆர்.தங்கராஜா, ரி.விநாயகமூர்த்தி, சி.இந்துமதி, இ.வரதராஜா, எம்.செல்லத்துரை, கே.ரஞ்சினி, எம்.அமிர்தகுலசிங்கம், எல்.விஜயரங்கன், ரி.கே.சங்கரலிங்கம், சி.சத்தியபாமா, எம்.விஜயலக்ஷ்சுமி, எ.பாமலோஜினி, எ.ஞானமலர், விவேகானந்தசிவம், பொ.அமிர்தலிங்கம், வி.புவனேந்திரன், எம்.மகாலட்சுமி, எல்.ஆர்.மருதநாயகம் ஆகியோரும் - தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றிய எஸ்.ராஜரட்ணம், எம்.கலாவர்ணம் ஆகியோரும் - கணக்குப்பதிவாளராகக் கடமையாற்றிய என்.போலிங்கம், ஆங்கில தட்டெழுத்தாளர் சி.சாந்தினி, தமிழ்த் தட்டெழுத்தாளர் எஸ்.பி.மரியராணி ஆகியோரே வெவ்வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர். (லெ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு அரங்கம்

## கனவான்களைத் தேடுகிறோம்

இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான இரண்டு டெஸ்ட் போட்டித் தொடர் ஆரம்பித்தபோதே, ஏதாவது அதீத காலநிலை மாற்றங்கள் ஏற்பட்டாலன்றி முடிவுகள் தெட்டத்தெளிவாகத் தெரிந்தே இருந்தன. இதற்கான பிரதான காரணம் கிரிக்கெட் ரசிகர்களுக்குத் தெரியாததல்ல இரண்டாம் நிலை அல்லது மூன்றாம் நிலை என்று பலவீனப்பட்டுவிட்ட சிம்பாப்வே அணி உண்மையிலேயே ஒரு மழலைப் பட்டாளம் என்பது முதலாவது ஒருநாள் போட்டி தவிர்ந்த அடுத்த நான்கு போட்டிகளிலும் தெளிவாகத் தெரிந்துவிட்டது. இந்த வகையில் ஒருநாள் போட்டியின் தாற்பரியங்களைவிட மிகவும் வித்தியாசமானது. ஆனால் கனதியான தாற்பரியங்கள் கொண்ட டெஸ்ட் போட்டிகள் பற்றிப் பேசியபோது, சிம்பாப்வே எத்தகைய அணுகுமுறையை மேற்கொள்ளும் என்று எதிர்பார்த்ததைவிட இலங்கை அணி இந்தத் தொடரை எவ்வாறு அணுகப் போகிறது என்பதே முக்கியமான கேள்வியாக இருந்தது.



சமிந்த வாஸ் "வானத்தையா கவுத்திட்டீங்க"

ஆனால், அந்த வகையில் இலங்கை அணி பொதுவாக கிரிக்கெட் ரசிகர்களை ஏமாற்றிவிட்டதென்றே தோன்றுகின்றது. சிம்பாப்வே அணி தனது ஓட்ட எண்ணிக்கைகளை பெரிதாக வளர்த்தெடுக்க முடியாத நிலையில் தடுமாறியதை இலங்கை அணி மட்டுமல்ல ரசிகர்களும் நன்றாகவே கணடிருநதார்கள்.

எனவே இலங்கை அணி துடுப்பெடுத்தாடும் போது எந்தளவுக்கு தன் ஓட்ட எண்ணிக்கையை வளர்த்துச் செல்லவேண்டும், எந்த மட்டில் நிறுத்திக் கொள்ள வேண்டும், எத்தகைய வெற்றியைத் தனதாக்கிக் கொளளவேண்டும் என்ற ஒரு நிர்ணயம் புத்திசாலி கிரிக்கெட் ரசி கர்களுக்கு நிறையவே இருந்தது. ஏனெனில், அடக்கி வாசித்ததும் வெற்றி இலங்கை அணிக்கே என்ற நிச்சயமான நிலையில் இலங்கை அணி இருந்தது. அதாவது, டெஸ்ட் கப்பலின் சுக்கான் இலங்கை அணியிடமே இருந்தது.

முதலாவது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 199 ஓட்டங்களுக்குச் சுருண்டபோது 450 ஓட்டங்கள் அளவில் எடுத்துக் கொண்டு இலங்கை அணி ஆட்டத்தை நிறுத்திக்கொள்ளும் என்றே எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஏனெனில், இலங்கை அணி தைபுவையும் தோழர்களையும் அதியுச்சவகையில் தான் தோற்கடித்து வெற்றிவாகை சூடிக்காட்ட வேண்டும் என்று யாரும் எதிர்பார்க்கவும் இல்லை. விரும்பவும் இல்லை. இன்னொருபுறம் முதல் இனிங்சில் அத்தபத்து 170 ஓட்டங்களும் ஜயசூரிய 157 ஓட்டங்களும் எடுத்ததை விட்டால், ஏனையவர்கள் பெரிதாக ஓட்டங்கள் குவிக்கவில்லைதான். ஆனாலும்கூட 5 விக்கெட் இழப்பிற்கு 400 ஓட்டங்கள் எடுத்த நிலையில் இலங்கை அணி ஆட்டத்தை நிறுத்திக் கொண்டிருந்தாலும்கூட ஏதோ ஒரு வெற்றி நிச்சயம். ஆனால், சகல விக்கெட்டுகளையும் இழந்து 541 ஓட்டம் வரை இலங்கை அணி விடாப்பிடியாக விளையாடியது. ரசிகர்களுக்கு அருவருப்பைத்தான் ஏற்படுத்தியது. சிம்பாப்வே அணியின் நிலையில் அவர்களை இலங்கை அணி இனிங்சால் வென்றதை ஒரு பொருட்டாக விவேகமுள்ள ரசிகர்கள் எடுத்துக் கொள்ளவில்லை.

முதலாவது டெஸ்ட் போட்டியின் முடிவின் பின்னராவது இலங்கை அணி சில களநிலை யதார்த்தங்களைப் புரிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் தன் உலகத்தரத்துக்கு ஏற்ற வகையில் விளையாடும் என்று எதிர்பார்த்தால் முதல் டெஸ்ட் ஆட்டத்தை விட இரண்டாவது ஆட்டம் இன்னும் வெறுப்பேற்றுவதாக அமைந்துவிட்டது. சிம்பாப்வே தன் முதலாவது இனிங்சில் 228 ஓட்டங்கள் மட்டுமே பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்து நிற்க, இலங்கை அணியே. சிலவேளை தனது இரண்டாவது இனிங்சில் பாரிய தொகையொன்றை சிம்பாப்வே சேகரித்து, இலங்கை அணிக்கு ஏதாவது நெருக்கடி வந்துவிடுமோ என்று பயந்தது போல 713 ஓட்டங்கள் வரை குவித்துத் தள்ளியது. சிறந்ததொரு இணைஜோடியாக அத்தபத்து, சங்கக்கார இருவரும் அபாரமாகவே ஆடினார்கள் என்பது உண்மை.

அந்தவகையில் இரண்டு விக்கெட்டுகள் இழந்த நிலையில் 538 ஓட்டங்களை எடுத்திருந்தபோது, இலங்கை அணி தனது ஆட்டத்தை நிறுத்தியிருந் தால், ஐந்தாவது நாள் வரை ஆட்டம் தொடர்ந்து நடந்து இலங்கை தோல்வி யைத் தழுவி இருக்குமோ?

ஆனால், அதற்கப்பால் வேறு வகையில் இலங்கை அணி சிந்தித்து இருக்கும் போலத் தெரிகிறது. ஒரு சில சாதனைகளையும் படைக்க உத்தேசித்திருப்பார்கள் போன்றதொரு சிந்தனைப் போக்கையே ரசிகர்கள் மத்தியில் இவர்களிடம் விளையாட்டை வளர்த்துச் சென்ற விதம் ஏற்படுத்திவிட்டது.

இடையில், நேரடி ஒளிபரப்பு வர்ணனையாளர்கள் பிறைன் லாராவின் 400 ஓட்டங்கள் பற்றிப் பிரலாபித்ததையும் கேட்க முடிந்தது. இரண்டாவது ஆட்டம் முடிந்த பின் சங்கக்கார லாராவின் சாதனை பற்றிச் சிந்தித்தாகவும் கூறியிருந்தார்.

எது எது எங்கெங்கே எப்படி எப்படி நடந்தால் பெருமை என்பதை அறியாதவர்கள்போல இலங்கை அணியினர் நடந்து கொண்ட தாகவே அநேக ரசிகர்கள் இந்தத் தொடர் பற்றி மனம் நொந்து போயிருக்கிறார்கள்.

மொத்தத்தில் பாலகர்களை, ஜாம்பவான்கள் வென்றிருக்க வேண்டியமுறை வேறு.

ஆனால், வென்று கொண்ட முறை வேறு என்பதால் இந்தத் தொடரின் இலங்கை வெற்றி பற்றி மகிழ்ச்சியடையவேண்டிய ரசிகர்களும் அதனை வெளிக்காட்ட கூச்சப்படுகிறார்கள்.

**- துஷ்யந்தன்.**

## அவள் பறந்து போனாளே

**2003** இல் பாரிஸில் நடைபெற்ற வேர்ல்ட் சம்பியன்ஷிப் போட்டிகளில் பரபரப்பாகப் பேசப்பட்டவர் அமெரிக்காவைச் சேர்ந்த வீராங்கனை கெலிவைற். மகளிருக்கான 100 மீற்றர் ஓட்டம், மற்றும் 200 மீற்றர் ஓட்டப்போட்டிகளில் தங்கம் வென்றவர் இவர். ஆனால் இவர் தங்கம் வென்று சில காலத்துக்குள்ளேயே ஊக்கமருந்துப் பாவனை தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டவர். தற்போது அக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான தீர்ப்பு வந்திருக்கிறது. அதன்படி கெலிவைற் பெற்ற தங்கங்கள் மீளப் பெறப்படுகின்றன. அதைவிட மோசமான நடவடிக்கை இரண்டு வருடங்களுக்கு தடகளப்போட்டிகளில் பங்கு பற்றுவதில் இருந்து தடைசெய்யப் பட்டுள்ளார். இங்குதான் கெலிவைற்றுக்குப் போடி விழுந்துள்ளது.



கெலிவைற் "எல்லாமே போயிடிச்சு"

தான் புத்தூக்கம் பெற சில மருந்துகளை உட்கொண்டதை இவர் ஏற்றுக்கொண்டுள்ளார். அதேவேளை அவற்றின் சில எத்தன்மை கொணடமைந்தன என்பதை அறியாது இருந்துவிட்டார் என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

இருந்தும் கெலிவைற் மனம் திறந்து பேசுகின்றார். இந்தச் செயல்மூலம், நான் என்னைமட்டும் ஏமாற்றவில்லை. எனது குடும்பம், நண்பர்கள், விளையாட்டுத்துறை எல்லாவற்றுக்குமே தீங்கிழைத்துவிட்டேன். என்று மனம்நொந்து கூறியிருக்கிறார் அவர்.

இவருக்கு தான் செய்த தவறின்மூலம் விழுந்த பேரிடி ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் எதென்ஸ் 2004 ஒலிம்பிக் போட்டியில் போட்டியிடும் வாய்ப்பு இல்லாமல் போனதேயாகும். இப்படியொரு சந்தர்ப்பத்தை எந்தவொரு வீரர், வீராங்கனையும் சகித்துக் கொளளமாட்டார்கள். கெலிவைற்றும் அப்படித்தான் என்றாலும், தனக்கு விதிக்கப்பட்ட போட்டிகளில், பங்குகொள்ளுதல் பற்றிய தண்டனை குறைக்கப்பட்டு தான் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குகொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்றும் வினயமானதொரு வேண்டுகோளை விடுத்துள்ளார். அவருக்கு ஒலிம்பிக்போட்டிகளில் பங்குகொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தால், அமெரிக்கா திரும்பும் போது வெறுங்கையுடன் திரும்பும் வீராங்கனை அல்ல அவர். ஆனால், மன்னிப்பு வழங்கப்படாமல் இருந்தால் அவருக்கு அதைவிட வேதனை இராது. 'அதனைத் தொடுவானேன் கவலைப்படுவானேன்.'

## குழம்புகிறார்கள் குழப்புகிறார்கள்

முத்தையா முரளிதரன் DOOSRA என்றொரு சுழற்பந்து வீச்சு முறையை அறிமுகப்படுத்தினாலும் படுத்தினார், எப்போது அவரைக் கடித்துக்குதறலாம் என்றுபார்த்துக் கொண்டிருந்த பல தரப்பும் வரிந்து கட்டிக்கொண்டு களத்தில் குதித்துவிட்டன. அவரைக் குற்ற வாளிக் கூண்டில் ஏற்ற. இதன் உச்சக் கட்டம் தான் அவுஸ்ரேலியப் பிரதமர் ஜோன் ஹோவாட் முத்தையா முரளிதரன் முறையற்ற பந்து வீசுபவர்தான் என்று தன் பங்கிற்கு முரளிக்கு ஒரு தலையடி கொடுத்துவிட்டார்.



முரளிக்காக அர்ஜுன "ஏய் குடும்பியா வைச்சிருக்கோம்"

பொதுவாக இந்தச் செய்தியைப் படித்த கிரிக்கெட் ரசிகர்களின் மனதில் ஒரு ஆதங்கம் ஏற்பட்டது உண்மை. ஒரு நாட்டின் தலைவர் இன்னொரு நாட்டின் ஒரு கிரிக்கெட் வீரர் தொடர்பில் கருத்தொன்றைக் கூறும் அளவிற்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்ற ஆதங்கமே அது. கிரிக்கெட்டைப் பொறுத்த சர்வதேசரீதியாக எவ்வளவோ தீர்க்க வேண்டிய விடயங்கள் இருக்கின்றன. அவற்றில் தனது கருத்தைக் கூறியருந்தால், அது மிகுந்த வரவேற்புப் பெற்றிருக்கும.

ஏனெனில், எவ்வளவோ வேலைப்பழுவுக்கு மததியில் கனவான்கள் ஆட்டம் பற்றியும் அதன நலன் பற்றியும் பேசுகிறாரே என்று பெருமைப்பட்டிருக்கலாம். ஆனால், முரளி திட்டமிட்டே நீண்டகாலம் புறக்கணிக்கப்பட்டு வருகிறார் என்ற கருத்து மேலோங்கி யுள்ள நிலையில் இந்த தலையீடு வித்தியாசமானதாகவே பார்க்கத் தோன்றுகின்றது. இது ஒரு புறமிருக்க சர்வதேச கிரிக்கெட் தொடர்பில் குரல் தரவல்ல அதிகாரிகள் ICC என்பதில் எந்தச் சநதேகமுமில்லை. இதில் என்ன மனதில் எழும் கேள்வி என்றால் அவுஸ்ரேலியப் பிரதமர் - முரளி மீதான தன் கருத்தைக் கூறியவுடனேயே ICC தனது எச்சரிக்கை குரலை எழுப்பியதா என்பதே அது. ஏனென்றால், முரளியின் விடயத்தில் இலங்கை ரசிகர்கள் மனம் நொந்து போயுள்ள ஒரு நிலையில் DOOSRA பந்து போடக்கூடாது என்று ICC முரளிக்கு ஒரு எச்சரிக்கை விடுத்தது. இது தொடர்பில் பொறுமையின் எல்லையைக் கடந்த இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ICC மீது சட்டநடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை ஏற்படும் என்றும், முரளி தேசிய சொத்து என்றும், ஒரு அறிக்கை வெளியிட்டார். எனவே, இப்போதுள்ள கேள்வி அவுஸ்ரேலியப் பிரதமர் கருத்துக்கூறியபோது, மௌன விரதம் காதத ICC இலங்கைப் பிரதமர் கருத்துக்கூறியதும் தனது நடுநிலைக் கொள்கையின் மேன்மையை உலகிற்குக் காட்ட நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளதா என்பதே அது. ஏனெனில, ICC தலைவர் ஈஷான்மாணி இரண்டு நாட்டுப் பிரதமர்களும் (அரசியல்வாதிகள்) முரளியின் விடயத்தில் தலையிட வேண்டாம் என்று ஒரு கோரிக்கையை விடுத்திருக்கிறார். மற்றவர்கள் ஒதுங்கிக் கொள்ளவேண்டும். நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம் என்கிறார் அவர். அரசியல் வாதிகள் முரளியின் விடயம் பற்றிக் கதைக்கப் போய் அது பல பரிமாணங்களில் விரிவடைந்து போகின்றது என்பது அவரது கவலை.

இதெல்லாம் சரி தான். ஆனால், ஒரு வகையான மௌனத்தையும் மறுபுறம் முரளியை வெருட்டும் போக்கையும் கொண்டிருந்த ICC அவுஸ்ரேலியப் பிரதமர் கருத்துக் கூறும்போது அஞ்ஞாதவாசமிருந்துவிட்டு இலங்கை குரல் எழுப்ப முற்பட்டதும் மட்டுமே துள்ளிக்குதிக்கினறதா என்பதுதான் புரியமாட்டேன் என்கிறது. எப்பொழுதும் ICC க்கு ஒரு சில நாடுகள் தான செல்லப்பிள்ளைகள். அல்லது அவர்களை எதிர்க்கத் துணிவில்லை. அதேவேளை பலம் குறைந்தவர்கள் (கிரிக்கெட் திறமையில் அல்ல) பேச முயற்சிக்கும்போது, அவர்கள் மீது சட்டாம்பிள்ளைத்தனம் புரிய முயற்சிப்பதும் பல சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்ட ஒன்றுதான். அது தான் இப்போதும் தொடர்கிறதா என்பது தான் விடை தெரியாத வினாவாக இருக்கின்றது. நீண்டகாலப்போக்கிலாவது சர்வதேச கிரிக்கெட் அமைப்பில் விரிசல்கள் ஏற்படாமல் பாதுகாக்கப்படவேண்டுமானால் ICC எல்லோரையும் ஒரே சமமாக மதிக்க வேண்டும், நடத்த வேண்டும். இது நடக்குமா?

**-ஜோசப் கிருஸ்ணா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# JOLLY STARS




## TWENTY 20 GP 2004

ஷென்லீ கிரிக்கெட் மைதானத்தில் இந்த மாதம் 31 ஆம் திகதி திங்கட்கிழமை அருமையானதொரு கிரிக்கெட் போட்டி. போட்டி நடைபெறும் மைதானதம் இங்கல்ல, இங்கிலாந்தில். ஆனால், கலந்து கொள்பவர்கள் எங்கள் இரத்தத்தின் இரத்தங்கள். முதன்முதலாக இங்கிலாந்தில் வசிக்கும் எம்மவர்கள் ஏற்பாடு செய்திருக்கும் இந்தப் போட்டிகள் 20 ஓவர்கள் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக அமையப் போகிறது. இது தொடர்பாக அறிய முற்பட்டபோது, "முதன் முறையாக தமிழர்கள் மத்தியில் நான்கு முன்னணித் தமிழ்ப் பாட சாலை களின் பழைய மாணவர்கள் மோதும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டி" என்று பளீரென்று மனதில் படக்கூடியதாக அறியமுடிந்தது. யாரந்த பழைய மாணவர்கள்?

என் மண்ணின் பாரம்பரிய பெருமைகளை என்றும் பட்டொளி வீசிப் பறக்கச் செய்து கொண்டிருக்கும் யாழ். மத்தியகல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர்களே அவர்கள். இந்தச் சுற்றுப்போட்டியை இலவசமாகவே பாருங்கள். வாருங்கள் என்கிறார்கள் ஏற்பாட்டாளர்கள். எம்மால் நேரடியாகப் போகமுடியாவிட்டாலும் எமது மண்ணின் வாசனையை இங்கிருந்தே நுகர்வோம். அது மட்டுமல்ல இந்தச் சுற்றுப்போட்டி. வெற்றிகரமாகத் தொடர்ந்து நடைபெற்று, எந்த அணி சம்பியன் என்று நாம் அறிந்துகொள்ள ஆவல் கொள்ளும் அளவுக்கு வளரவேண்டும் என்றும் வாழ்த்துகின்றோம்.

- சார்ள்ஸ்

# ஜோனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

01. 2010 இல் உலகக் கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டியை நடத்தப் போகும் நாடு எது?
02. பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பயிற்றுநர் யார்?
03. தற்போது நடைபெறவிருந்த டெஸ்ட்தொடர் ஒன்று ரத்துச் செய்யப் பட்டுள்ளது. அது எந்தெந்த நாடுகளுக்கிடையிலானது?

**விளையாட்டுப் புதிர் - 12**

**விண்ணப்பப்படிவம்.**

முழுப்பெயர்:- ..................................................

முகவரி:- ..................................................

01.

02.

03.

விடைகள் எழுதப்பட்ட இவ் விண்ணப்பப் படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு, 28.05.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

*விலாசம்:- விளையாட்டுப் புதிர் - இல. 12,*
*நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

## விளையாட்டுப் புதிர் இல. 11 இன் விடைகள்

1) அவுஸ்ரேலியா
2) பங்களாதேஷ்
3) ஆர்ஜென்ரீனா

**பரிசு பெற்றவர்**
யோ. நிரோஷன்
73 உதயநகர் கிழக்கு
கிளிநொச்சி.

அனுசரணை:- ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்
விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்
YONEX MULTI PALACE
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021-2227648, 0777166894.

# திரும்பிப் பாருங்கள்


ஹலட் மசூட்

மேற்கிந்தியத் தீவுகள் அணி இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் போட்டிகளில் 3:0 என்ற ரீதியில் தோல்வியைத் தழுவிக் கொண்டும் ஒருநாள் போட்டித் தொடரைச் சமப்படுத்திய நிலையிலும் ஆரம்பமானது. பங்களாதேஷ் அணியுடனான ஒருநாள் போட்டித் தொடர்.

இந்தப் போட்டித் தொடர் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஆறுதலைத் தருவதாக அமைந்துள்ளது. தொடர் வெற்றி ஒன்றைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றது. நடைபெற்ற மூன்று ஒரு நாள் போட்டிகளிலும் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியுள்ளது. இந்த வகையில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு மகிழ்ச்சியே.

இந்த நிலையில் நாம் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். மேற்கிந்திய தீவுகள் அணியின் வெற்றியானது நிச்சயம் செய்யப்பட்ட ஒன்றாக அமைந்துவிட்டபோதிலும், சில நெருக்கடிகளையும் மயிரிழையில் வெற்றி பெற்ற போட்டிகளையும் இங்கே கவனத்தில் கொள்ளவேண்டும்.

நடைபெற்ற முதலாவது போட்டியில் பங்களாதேஷ் அணி 144 ஓட்டங்களை 8 விக்கெட்டுக்களை இழந்து பெற்றுக்கொண்டது. இந்த வெற்றியிலக்கை மேற்கு இந்தியா இலகுவில் அடைந்துவிடும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், தனது இறுதி இலக்கு இணைப்பாட்டத்தின் மூலமே முதல் வெற்றியை மேற்கிந்தியத் தீவுகள் பெறமுடிந்தது. இறுதி விக்கெட் இணைப்பாட்டத்தில் பிராட்ஸோ பெற்ற 12 ஓட்டங்கள் அணியின் வெற்றிக்கு உறுதிசெய்தது. ஆட்ட நாயகனாகவும் அவரே தெரிவு செய்யப்பட்டார்.

# நாங்கள்தான்

ஒரு மாதிரியாக மேற்கிந்திய அணி பெற்ற முதலாவது வெற்றியோடு, மற்றைய போட்டிகளைச் சந்திக்கத் தயாரானது அந்த அணி.

போட்டிகள் முழுமையாக நடைபெறமுடியாமல் மழை குறுக்கிட்டது. இதனால், மற்றைய இரண்டு போட்டிகளுமே 25 ஓவர்களாக நிர்ணயிக்கப்பட்டன. இரண்டாவது போட்டியிலும் மேற்கிந்திய அணி 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியிலும் பங்களாதேஷ் அணியின் நெருக்குதல் காணப்படவே செய்தது. இலகுவான வெற்றியாக இந்த வெற்றியும் கருதப்படமுடியவில்லை. மூன்றாவது போட்டியில் பங்களாதேஷ் பெற்ற ஓட்டங்கள் 25 ஓவரில் 7 விக்கெட்டுக்களை இழந்து, 118 . பங்களாதேஷ் அணியின் ஹபிபுல் 42 ஓட்டங்களைப் பெற்றார்.


ஹபிபுல் பஷார்

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி 24.1 ஓவரில் 3 விக்கெட்டுக்களை இழந்து, 119 ஓட்டங்களைப் பெற்று 3 ஆவது போட்டியையும் 3 தொடர் வெற்றிகளையும் பெற்றுக் கொண்டது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

ஆட்டத் தொடர் நாயகனாக ஆர்.ஸ்மித் தெரிவு செய்யப்பட்டார். மேற்கிந்திய அணி பல நாள் இடைவெளியின் பின்னர் தொடர் ஒன்றைக் கைப்பற்றிய நிலையில், டெஸ்ட் போட்டித் தொடரையும் வெல்ல வேண்டுமென்ற உற்சாகத்துடன் உள்ளது. இந்த நிலையில் பங்களாதேஷ் அணியைப் பொறுத்தவரையில், வளர்ந்துவரும் ஒரு அணியாகத் தன்னை நிலைநிறுத்தியிருப்பதையே இந்த ஒருநாள் போட்டித்தொடர் உணர்த்தி நிற்கின்றது.

இலங்கை அணியை உலகக்கோப்பை பெறுவதற்கு வழிசமைத்த ஆசான் 'வட்மோரின்' சரியான வழிகாட்டலுக்கூடாக பங்களாதேஷ் அணி செல்லும் போக்கையே இந்தப் போட்டித் தொடர் உணர்த்தியுள்ளது. பலவீனமான ஒரு நிலையிலுள்ள பங்களாதேஷ் அணியுடன் போராடித்தான் மேற்கிந்தியர்கள் வெற்றிபெற்றார்கள் என்பது அல்ல இங்கு தெரிவிக்கக்கூடிய கருத்து. பலமான ஒரு நிலையைப் பெற வளர்ந்து வருகின்றார்கள் பங்களாதேஷ் அணியினர் என்பதே கருத்திற் கொள்ளப்படவேண்டிய விடயம். அதற்குச் சான்றாக 3 போட்டிகளிலும் அவர்கள் விளையாடிக் [illegible] என்பதே பொருத்தம்.


வெண்மதி

# மாத்தி யோசிங்கப்பா

சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் வெள்ளை இனவீரர்களுக்கும் தேர்வுக் குழுவினர்களுக்கும் இடையில் தோன்றிய சர்ச்சையானது, சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் அணிகளுக்கிடையே இரண்டு பிரிவுகளை உருவாக்கவேண்டும் என்ற கருத்தினைத் தோற்றுவித்துள்ளது.

சிம்பாப்வே அணியின் வெள்ளை இன சிரேஷ்ட வீரர்கள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து வலுவான இலங்கை அணிக்கு எதிராகக் களம் இறங்கிய சிம்பாப்வே குழந்தைகள் அணி டெஸ்ட் போட்டியின் போது சோபிக்காததை அடுத்தே இந்தக் கருத்து வலுப்பெற்றுள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட இந்திய அணித் தலைவர் கங்கூலி - டெஸ்ட் போட்டிகளில் இரட்டடுக்கு முறையைக் கொண்டுவர வேண்டும் எனத் தெரிவித்தார். அதாவது, டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற நாடுகளைப் பலத்தின் அடிப்படையில் இரண்டாகப் பிரித்து பலம் வாய்ந்த அணிகள் தமக்குள்ளும், பலம் குறைந்த அணிகள் தமக்குள்ளும் போட்டிகளில் விளையாட வேண்டும் என்பதே கங்கூலியிக் கருத்தாகும்.



கங்கூலி "நல்ல யோசனை தானப்பா"

தற்பொழுது 10 நாடுகளுக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. மேலும் 6 நாடுகளுக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்க விருப்பதாக ஐ.சி.சியின் தலைவர் ஈஷான்மாணி தெரிவித்துள்ளார். இந்த நிலையில் கங்கூலியின் கருத்து ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும்.

ஏனெனில், 2000 ஆம் ஆண்டு டெஸ்ட் அந்தஸ்து பெற்ற பங்களாதேஷ் அணி கடந்த நான்கு ஆண்டுகளாக ஒரு போட்டியிலாவது வெற்றி பெறுவதற்காகப் போராடிவருகின்றது. தற்போது சிம்பாப்வே அணியினது டெஸ்ட் அந்தஸ்தை ரத்துச் செய்வதா என ஐ.சி.சி ஆலோசித்து வருகின்றது. ஆகவே, டெஸ்ட் போட்டிகளில் இரட்டடுக்கு முறை ஏற்படுத்தப்படவேண்டியது அவசியமாகும்.

டெஸ்ட் போட்டிகள் என்றாலே ரசிகர் மத்தியில் ஆர்வம் குறைவாகவே காணப்படுகின்றது. இந்த நிலையில் பலம் வாய்ந்த அணிகளும், பலம் குறைந்த அணிகளும் போட்டிகளில் கலந்துகொள்ளும்போது கிரிக்கெட் மீதான எதிர்பார்ப்பு, விறுவிறுப்புக் குறைநதுவரும் அபாயம் இருக்கின்றது.

மேலும் பலம் குறைந்த அணிகளுடன் மோதும் பலம் வாய்ந்த அணிகளால் ஏற்படுத்தப்படும் சாதனைகளை வலுவற்ற சாதனைகளாகவே கணிக்கப்படும் நிலை தோன்றிவரும். மேலும் பங்களாதேஷ் போன்ற அணிகள் ஒரு போட்டியில்கூட இதுவரை வெற்றி பெறாதது உண்மை. அந்த அணிகளை உளவியல்ரீதியாகப் பாதிப்படையச் செய்து அந்த அணிகளின் வளர்ச்சியை தடுத்துவிடும். எனவே, டெஸ்ட் போட்டிகளில் இரட்டடுக்குமுறை என்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும்.

லெஸ்லி

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sport

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி பொதுத் தராதரப் பத்திர (உ/த) 2004

## புவியியல் III

## மாதிரி வினாத்தாள்

*(நேற்றைய தொடர்ச்சி.......)*

**பொருத்தமானது அல்லது சரியானது என நீர் கருதும் விடையைத் தெரிவுசெய்க.**

1. மானிடப் புவியியல் என்ற பதத்தை முதன்முதல் பயன்படுத்தியவர்
   1) அரிஸ்டோட்டில் 2) லாப்லாஜ் 3) கன்டிஸ்டன் 4) றட்சல்
2. 1960 இல் புவிச்சூழலில் உற்பத்திக்காக மனித முயற்சியை பயன்படுத்துவதில் பாரிய திருப்பம் ஏற்பட்டது. இது புவியியலில் ஏற்பட்டது. இது புவியியலில் ஏற்பட்ட
   1) நடத்தை சார் புரட்சி 2) அளவு சார் புரட்சி
   3) பரப்பு சார் புரட்சி 4) தேவை சார் புரட்சி
3. இலங்கையில் இறுதியான குடித்தொகைக் கணிப்பீடு 2001 இல் மேற்கொள்ளப்பட்டது. இது எத்தனை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது.
   1) 24 2) 18 3) 20 4) 25
4. கிரால், மசாய் (Kraols, Masai) என்பவவை
   1) மத்திய ஐரோப்பாவின் குழுமிய குடியிருப்பு
   2) தென்னாபிரிக்காவில் நாடாவடிவக் குடியிருப்பு
   3) ஆபிரிக்காவில் வட்ட வடிவக் குடியிருப்பு
   4) மேற்கு ஐக்கிய அமெரிக்காவின் பண்ணைக் குடியிருப்பு
5. எட்டு நாடுகளை எல்லையாகக்கொண்ட ஐரோப்பிய நாடு
   1) லக்சம்பேர்க் 2) ஜேர்மனி 3) ஆஸ்திரியா 4) சுவிற்சர்லாந்து
6. நகர வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக நகர விளிம்புப் பகுதியில் அமைக்கப்படும் வலயம்.
   1) பச்சை வலயம் 2) துணைச்சேவை வலயம்
   3) இடைமாறு வலயம் 4) விளிம்பு வலயம்.
7. இயற்கைச் சூழலுக்கு மாறாகத் தாவரங்கள் அற்றதாகவும், உயரமான கட்டிடங்களைக் கொண்டதாகவும் நகரமானது மாற்றமடையும்போது அங்கு உருவாகுவது.
   1) கபிலநிற நகர் 2) அத்துமீறிய குடிமனை
   3) சாம்பல்வான்பரப்பு 4) நகரவெப்பதீவுகள்
8. கொழும்பு நகரைச் சூழ்ந்து காணப்படும் சிறு நகர்களான வத்தளை, மொரட்டுவ என்பவை
   1) நகர்ப்புறங்கள் 2) ஒட்டுண்ணி நகர்கள்
   3) ஹைபர் நகர் 4) நகரவெளி
9. "கிபுட்ஸ்" என்பது
   1) சோவியத் கூட்டமைப்பின் கூட்டு விவசாயப் பண்ணை
   2) கியூபாவின் கூட்டு விவசாயப் பண்ணை
   3) சீனாவின் கூட்டு விவசாயப்பண்ணை
   4) இஸ்ரேலின் கூட்டு விவசாயப்பண்ணை
10. அருகில் காட்டப்பட்டுள்ள ஆபிரிக்கப் புறவரிப்படத்தில் நிழற்றப்பட்ட பகுதியில் அமைந்திருப்பது
    1) கதங்கா செம்பு வயல்
    2) கிப்பர்லி வைரச்சுரங்கம்
    3) பிரிரோறியா தங்கச் சுரங்கம்
    4) ஜோகனஸ் பேர்க்நிலக்கரி வயல்



11. அன்னாசி உற்பத்தியில் முக்கியம் பெறும் ஆசிய நாடு
    1) கொஸ் கொஸ் 2) யப்பான்
    3) மலேசியா 4) சிங்கப்பூர்
12. ஒரு நாட்டின் சனத்தொகை தொடர்ச்சியாக 1.4% ஆல் அதிகரிப்பின் அந்நாட்டின் குடித் தொகை இரட்டிப்பாக எடுக்கும் காலம்.
    1) 35 வருடங்கள் 2) 50 வருடங்கள்
    3)) 70 வருடங்கள் 4) 140 வருடங்கள்
13. " ராணா" பிரதாப்கர் என்பது
    1) இந்தியாவின் பாரிய இரும்புருக்கு மையம்
    2) மும்பையின் நெசவாலை மையம்
    3) இந்தியாவின் அனுமின் நிலையம்
    4) அகமதாபாத்தின் எண்ணை வயல்
14. படத்தில் நிழற்றிக் காட்டப்பட்டிருப்பது இத்தாலியின் கைத்தொழில் முக்கோணம். அதில் A, B, C எழுத்துக் குறிக்கும் கைத்தொழில் நிலையங்கள் முறையே
    1) ஜெனோவா, தூரின், மிலான்
    2) ஜெனோவா, பதுஷா, மார்செயில்
    3) பாதுஷா, தூரின், மார்செயில்
    4) மிலோன், பாதுஷா, தூரின்




15. உலகில் அதிக குடித்தொகை கொண்ட நாடு
    1) இந்தியா 2) சீனா 3) கனடா 4) ஐக்கிய அமெரிக்கா
16. குடித்தொகை வளர்ச்சி வீதம் பூச்சியமாக உள்ள நாடு.
    1) நெதர்லாந்து 2) பெல்ஜியம்
    3) நோர்வே 4) ஸ்பெயின்
17. அமெரிக்காவின் பொருளாதாரத்திற்கு சமமாக ஐரோப்பிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு
    1) ஐரோப்பிய சுதந்திர வர்த்தகப் பிரதேசம்
    2) ஐரோப்பிய பொருளாதாரச் சந்தை
    3) ஐரோப்பிய ஒன்றியம்
    4) ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம்
18. இன்றைய குடித்தொகைப் போக்கின் படி 2050 ஆம் ஆண்டில் குடித்தொகை வளர்ச்சி வீதம் குறைவடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் படி 2002 இல் 07% மாக இருந்த 65 வயதிற்கு மேற்பட்டோர் 2050 இல் எத்தனை வீதமாக இருப்பர்
    1) 19% 2) 05% 3) 17% 4) 03%
19. இந்தியாவின் பிலாய் இரும்புக் கைத்தொழில் நிலையம் அமைந்துள்ள மாநிலம்
    1) சத்திஸ்கர் 2) ஜார்கண்ட்
    3) உத்தராஞ்சல் 4) பீகார்
20. ஐரோப்பாவில் சகலவிதமான இரும்புருக்கு பொருட்களையும் உற்பத்தி செய்யும் கைத்தொழிற் பிரதேசம்
    1) சாக்சனி கைத்தொழிற் பிரதேசம்
    2) கற்றாலுனா கைத்தொழிற் பிரதேசம்
    3) நூர்கைத் தொழிற் பிரதேசம்
    4) கிளைட் கைத்தொழிற் பிரதேசம்
21. சன நெருக்கமான பாரிய நகர்ப் பிரதேசங்களுக்கு அண்மையில் இடம்பெறும் காய்கறி உற்பத்தி தொடர்பாக அண்மையில் காணப்படக் கூடிய போக்கு
    1) கூடிய விளைச்சலைப் பெறுவதற்கான இரசாயனப் பசளைகளைப் பயன்படுத்தல்
    2) பாதுகாப்பான பொதியிடும் முறைகளைப் பயன்படுத்தல்
    3) பச்சை இல்லங்களில் பயிர் செய்தல்
    4) சேதனைப் பசளைகளைப் பயன்படுத்தல்
22. உயர் தொழில்நுட்பவியல் தொழிற்சாலைகள் அமைவதில் செல்வாக்குச் செலுத்துவது
    1) மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் உள்ள வசதிகள்
    2) சந்தைகள் அண்மையில் இருத்தல்
    3) மூலதனத்தைப் பெற்றுக்கொள்ளும் வசதிகள்
    4) ஆய்வு நிலையங்களுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் அண்மையில் இருத்தல்
23. ஸ்கண்டிநேவியன் நாடுகளில் A, B என்ற எழுத்தால் நிழற்றப்பட்டிருப்பது கிருனா, ஜெலவயர் என்பவை இவை எதற்குப் பிரசித்தி பெற்றவை



    1) காரியச்சுரங்கம்
    2) நீர்மின் உற்பத்தி நிலையம்.
    3) யுரேனியப்படிவு
    4) இரும்பு வயல்
24. ஒரு நாடு புதிய கைத்தொழில் நாடு என்ற அந்தஸ்தினைப் பெற உலக வங்கியால் வரையறுக்கப்பட்ட பண்புகளில் பிழையானது
    1) 1800 Us $ அல்லது அதற்குக் கூடுதலான தலாவருமானமும் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியும் இருத்தல்
    2) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20% ஆனவை கைத்தொழிற் பொருட்களின் பங்களிப்பாக இருத்தல்
    3) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முதலீடுகள் 30 சதவீதத்திற்கு மேலாக இருத்தல்
    4) வருடாந்த பொருளாதார வளர்ச்சி 8%-10% மாக இருத்தல்
25. உலகளாவிய பொருளாதார அமைப்புக்குள் மூலதனத்துக்காக ஏங்கும் விருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வாக அமைவது.
    1) திறந்த பொருளாதாரக் கொள்கை
    2) பொருளாதார ஒப்பந்தங்கள்
    3) வர்த்தகக் கூட்டமைப்புக்கள்
    4) பூகோளமயமாதல்



26. மேலே தென்அமெரிக்கப் புறவரிப்படத்தில் A, B, C, D என்பவை முக்கிய துறைமுகங்கள் நான்கினைக் குறிக்கின்றது. அவற்றில் சரியான விடைத்தெரிவு
    1) A - அறிக்கா B- சந்தியோகா C - லிட்டமா D - மொன்ரிவீடியோ
    2) A - லிமா B - சந்தியோகா C - புவனஸ்அயர்ஸ் D - றியோடிஜெனீரோ
    3) A - அறிக்கா B- வால்பறைசோ C - பகியாபிளாஸ்கா D - றியோடிஜெனீரோ
    4) A - லீமா B- வால்பறைசோ C - பகியாபிளாஸ்கா D - மொன்ரிவடியோ
27. இலங்கையின் கைத்தொழில் துறையில் அண்மைக்காலப் போக்கு எனக் கருதப்படக் கூடிய விடயம்.
    1) தயாரிக்கப்பட்ட உணவு உற்பத்தி முக்கிய இடத்தைப் பெறல்
    2) உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்டுத்துதல் அதிகரிப்பு
    3) துணிகள், ஆடைகள், பிரிவுகளின் துரித வளர்ச்சி
    4) அரசாங்கத்துறைக் கைத்தொழில்கள் அதிக இலாபம் பெறுதல்
28. இலங்கையில் குடித்தொகை வளர்ச்சி வீதம் மிகக்குறைந்த மாவட்டமும் கூடிய மாவட்டமும் முறையே
    1) கம்பஹாவும் மட்டக்களப்பும்
    2) காலியும் அம்பாறையும்
    3) கொழும்பும் பொலநறுவையும்
    4) கேகாலையும் அம்பாறையும்
29. நீர்கொழும்பிலிருந்து கேகாலையூடாக கண்டிவரை பேருந்தில் செல்லும்போது கடந்து செல்லவேண்டிய கணவாய்
    1) கடுகண்ணாவை 2) கலகெதர
    3) பலன 4) கினிகத்தென
30. இலங்கை 21 ஆம் நுற்றாண்டில் நுழைந்தபோது எதிர்நோக்கிய பொருளாதார சவால்களில் பிழையானது
    1) கடன் மீளச் செலுத்துதல்
    2) வட்டிக்கொடுப்பனவுகள்
    3) ஏற்றுமதியில் கைத்தொழிற்பொருட்களின் பங்கு வீழ்ச்சி
    4) புனர்நிர்மாணப் பணிகள்
31. வடக்கு கிழக்கு மாகாணத்தையும் அதனை அடுத்திருக்கும் அயன்மாவட்ட மக்களினதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக உலக வங்கியின் உதவியுடன் செயற்படும் திட்டம்
    1) நியாப் திட்டம் 2) 100 நாள் வேலைத் திட்டம்
    3) கிராமிய விரிவாக்கத்திட்டம் 4) இளைஞர் சேனை அமைப்பு
32. உருகெஸ்வத்த தொழில்நுட்பக்கல்லூரி அமைப்புக்கு உதவிய நாடு
    1) கனடா 2) யப்பான்
    3) சுவீடன் 4) பிரித்தானியா
33. மகாவலி அபிவிருத்தி செயற்திட்டத்தில் முழுமையாகப் புதிய நகரங்கள், கிராமங்கள் அமைக்கப்பட்ட அபிவிருத்திப் பிரதேசம்
    1) "H" பிரதேசம் 2) "C" பிரதேசம்
    3) "L" பிரதேசம் 4) "B" பிரதேசம்
34. இலங்கையின் தாழ்நில உலர்வலயம் பின்வரும் பயிர்களுள் எதனைப் பயிர்செய்வதற்கு மிகவும் ஏற்றது.
    1) மரமுந்திரிகை 2) கறுவா
    கராம்பு 4) மிளகு
35. இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள அனல் மின் நிலையங்களில் கூடிய மின்சக்தியினை உற்பத்தி செய்யும் நிலையம்
    1) சபுகஸ்கந்த 2) ஏசியா பவர்
    3) கொலன்னாவை 4) இலங்கை மின்சார சபை
36. பெலவத்தை கரும்பு உற்பத்தி செய்யப்படும் இடம் அமைந்துள்ள மாவட்டம்
    1) மொனராகலை 2) அம்பாந்தோட்டை
    3) மாத்தறை 4) அம்பாறை
37. சிறந்த இயற்கைக் காட்டின் அமைப்பைப் பின்பற்றி வெவ்வேறு படிகளிலே வளரும் பல்வேறு மரங்களையும், பயிர்களையும் கலந்து வளர்க்கும் முறை
    1) சமுதாயக் காட்டுத் திட்டம் 2) பெருங்காடாக்கத் திட்டம்
    3) காட்டுத் தோட்டம் 4) மரவரிசை வேலி
38. இலங்கையின் தேயிலைக் கைத்தொழிலின் அபிவிருத்திக்கு உகந்த உத்திகளைக் குறிப்பிடும் விடை
    A- தேயிலை பயிரிடப்படும் எல்லாக் காணிகளையும் அரசு பொறுப்பேற்றல்
    B- தேயிலைக்கு புதிய சந்தைகளைக் கண்டுபிடித்தல்
    C- மண்ணை மீண்டும் வளமுள்ளதாக்கல்
    D- பாரம்பரிய தேயிலைத் தொழிற்சாலைகளை மேலும் பராமரித்தல்
    E- அதிக பயனுறுதி மிக்க நிலப்பயன்பாடு
    1) A, B, C 2) B, D, E
    3) D, E, A 4) B, C, E
39. இலங்கையில் கைத்தொழில் அமைவிடங்களாகக் குறைந்த அளவில் காணப்படும் மாகாணம்
    1) மத்தியமாகாணம் 2) வடமாகாணம்
    3) கிழக்குமாகாணம் 4) தென்மாகாணம்
40. இலங்கையில் இறப்பர் பிரதானமாகப் பயிரிடப்படும் மூன்று மாவட்டங்கள்
    1) கேகாலை, மாத்தளை, நுவரேலியா
    2) களுத்துறை, நுவரேலியா, காலி
    3) கம்பஹா, கேகாலை, நுவரேலியா
    4) களுத்துறை, கோகாலை, இரத்தினபுரி

செல்வி.ப.கந்தசாமி B.A. (Hons) Geo .spl.Dip-in-Edu
கொக்குவில் இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## இப்போதாவது....?

யாழ்ப்பாணக் குடாநாட்டில் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடுவதற்காக சட்டம், ஒழுங்கு, நீதித்துறை மற்றும் நிர்வாகத்துறைசார் அதிகாரிகள் சமூகத் தலைவர்களுக்கான மாநாடு ஒன்று விரைவில் கூட்டப்படவுள்ளது.

யாழ்.அரச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்தமாநாடு அடுத்தமாதம் முதலாம் திகதி நடைபெறும் என்று அரச அதிபர் அறிவித்துள்ளார்.

குடாநாட்டில் கடந்த பலமாதங்களாகவே குற்றச் செயல்களும், சமூகவிரோதச் செயற்பாடுகளும் அதிகரித்து வந்திருந்ததை எவரும் அறிவர்.

நாளாந்தப் பத்திரிகைகளில் - இடம்பெற்ற இத்தகைய குற்றசசெயல்கள், சமூகவிரோதச்செயல்கள் குறித்த செய்திகளை விடவும் சமூக மட்டத்தில் ஏராளமான சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

வெளிவராத சம்பவங்களாக இடம்பெற்ற எத்தனையோ சம்பவங்களின் பின்னணியில் உள்ளூர் சமூக குற்றவாளிகளுக்குள்ள தொடர்புகளும் அவற்றின் தன்மைகளையும் மக்கள் நன்கு அறிவார்கள்.

ஆனால், இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வழியற்ற நிலையில் குடாநாட்டு மக்கள் தவித்து வருவதை எவரும் நிராகரித்துவிடமுடியாது.

இனந்தெரியாத கொலைகள், கொள்ளைகள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான பாலியல் குற்றங்கள் மற்றும் சமூக விரோதக் குற்றச்செயல்கள் பல்வேறு பரிமாணங்களினூடாகத் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றது.

இவ்வாறு இடம்பெற்ற பாரியதும், பாரதூரமான குற்றச் செயல்கள் குறித்து ஏதோ விசாரணைகள், வழக்குகள் நடைபெற்றாலும் கூட அவை மக்களுக்கு நீதியான தீர்ப்பை பெற்றுத்தரக் கூடியதாக அமையவில்லை.

இந்தக் கட்டத்தில் குடாநாட்டு மக்களின் உள்ளத்து உணர்வுகள் இந்த நெருக்கடியில் இருந்து மீட்க எவருமே இல்லையா எனக் குமுறியதை, குமுறுவதை எவருமே நிராகரித்துவிட முடியாது.

இப்படிப்பட்ட சூழலில்தான் அண்மையில் எல்லாளன் படை சமூகவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக செயலில் இறங்கியதைத் தொடர்ந்தே நீதித்துறை, நிர்வாகத்துறை சட்டம்ஒழுங்கு துறைசார் அதிகாரிகள் கொஞ்சம் விழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதனால்தான், இப்போதாவது குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தவேண்டும் என்ற சிந்தனை நோக்கம் இவர்களுக்கு வந்துள்ளது.

குடாநாட்டில் குற்றச்செயல்களின் அதிகரிப்பு எப்போதோ ஏற்படத் தொடங்கிவிட்டது. இதைக் கட்டுப்படுத்த தற்போது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்போவதாக நீதித்துறை, சட்டத்துறை, நிர்வாகத்துறை அதிகாரிகள் கூறிவந்தாலும் அவை செயல்வடிவம் பெறவில்லை.

இப்போது செயலகத்தில் கூட்டப்படவுள்ள மாநாட்டின் மூலமாவது குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த இப்படிப்பட்டதொரு மாநாட்டைக்கூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதை பாராட்டியே ஆகவேண்டும்.

இந்த மாநாடு ஏதோ பெயருக்கு நான்கு மணித்தியாலங்கள் கூடிப் பேசிவிட்டுப்போகும் கூட்டமாக இருக்காமல் அர்த்தமுள்ள தீர்வைக் குடாநாட்டு மக்களுக்கு வழங்கக் கூடியதாக அமையவேண்டும்.

இவ்வாறு மக்களுக்கு நேரடியாக தீர்வைப் பெற்றுத்தரக் கூடிய மாநாடாக அமையாவிட்டால் எல்லாளன் படை போன்றோரின் நடவடிக்கைகளும் தொடரவேகூடும்.

எல்லாளன் என்ற பெயரில் நடத்தப்பட்ட இரண்டு தாக்குதல் சம்பவங்கள் சமூகவிரோதக் குற்றங்களில் ஈடுபட்டிருப்போரை சற்றுக் கலக்கமடையச் செய்திருக்கிறது உண்மையே.

ஆனால், எல்லாளன் படை என்ற பெயரைப் பயன்படுத்தி சமூகவிரோதச் செயல்களைக் கட்டுப்படுத்த முயல்பவர்கள் ஒருபுறமிருக்க இன்னொரு புறத்தில் எல்லாளன் படை என்ற பெயரில் விசமத்தனமான செயல்களில் ஈடுபட்டு வருகின்றதும் குறிப்பிடத்தக்கது.


சுயலாபத்திற்காகவும், தனிப்பட்ட பகைமையை வைத்துக்கொண்டும் எல்லாளன் படை என்ற பெயரில் எச்சரிக்கைகள் அனுப்பப்படுவதாகவும் செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

இதன் மூலம் சமூகத்தில் புதிய பல பிரச்சினைகளும் ஏற்படுவதுடன் பல உளரீதியான நெருக்குதல்களுக்கும் உள்ளாகநேரிட்டுள்ளது.

இப்படிப் பல்வேறு பிரச்சினைகள் சமூகத்தில் தோன்றியுள்ள குடாநாட்டின் குற்றச்செயல்களை உரிய அதிகாரிகள் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுக்கவோ, கட்டுப்படுத்தவோ நடவடிக்கை எடுக்கவேண்டியது மிகமிக அவசியமாகும்.

இப்போது கட்டுப்படுத்த முனையாவிட்டால் சமூகக் குற்றங்கள் உச்சக்கட்டத்திற்கு சென்ற பின்னர் அதனைக் கட்டுப்படுத்த வேறெவரும் முன்வரும்போது அதை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் பார்த்துக்கொண்டிருப்பதைத் தவிர வேறெதையும் செய்யமுடியாதவர்களாகவே இருப்பார்கள் என்பது திண்ணம்.

## நாடும் நடப்பும்




# சமிக்ஞை விளக்குகள் அற்ற பஸ்வண்டிகள் சேவையில் !

சமிக்ஞை விளக்குகள் அற்ற பஸ் வண்டிகளை வட பிராந்திய போக்குவரத்துச்சபை சேவையிலீடுபடுத்தியுள்ளமையை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறான பஸ் வண்டிகள் தற்பொழுது குடாநாட்டுக்கான போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுவருகின்றன.

போக்குவரத்து நெரிசல்களும், வீதி விபத்துக்களும் அதிகமாகவுள்ள வேளையில், உரிய சமிக்ஞை விளக்குகள் அற்ற வாகனங்களைச் சேவையிலீடுபடுத்துவது ஆபத்தான விளைவுகளை உருவாக்கக்கூடுமென அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாகப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் உரிய கவனமெடுக்காது செயற்பட்டு வருகின்றனர்.

தற்பொழுது குடாநாட்டில் சேவையிலீடுபடும் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்வண்டிகளில் பல - தென்பகுதியில் போக்குவரத்துக்குப் பாவித்த பின்னரே வட பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டவையாகும்.

இவற்றில் சில திருத்தவேலைகளை மேற்கொண்ட பின்னர் குடாநாட்டில் சேவையிலீடுபடுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (94)

### 600 கிராமங்களை
## அபிவிருத்தி செய்யும் நோக்கில் நியாப் - 2 இன் திட்டம் அமுல்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நியாப் திட்டம் 2 இன் கீழ் 50,000 குடும்பங்கள் நன்மையடையவுள்ளன. இந்தத் திட்டத்தில் 600 கிராமங்கள் இனங்காணப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதற்காக உலக வங்கி 80 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. இந்தத் திட்டம் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டுவரை 6 ஆண்டுகாலமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன் முதல் கட்டமாக கிளிநொச்சி, அம்பாறை, திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களில் தலா ஒவ்வொரு குளங்கள், 17.5 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் புனரமைக்கப்படவுள்ளது. 30 குடும்பங்களுக்குக் குறையாதவர்கள் மீளக்குடியமர்ந்திருக்கும் பட்சத்தில் அந்தக் கிராமம் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வலி.வடக்கு பிரதேச செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்கள்

வலி.வடக்கு தெல்லிப்பளைப் பிரதேச செயலகம் இந்த ஆண்டு மேற்கொள்ளவுள்ள திட்டங்களுக்குப் பின்வரும் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அளவெட்டியில் கலாசார மண்டபம் அமைப்பதற்கு 3 மில்லியன் ரூபா, தெல்லிப்பளை, அளவெட்டி, மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க புனரமைப்பிற்கு 10 லட்சத்து 40 ஆயிரம் ரூபா. போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலைக்கென தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்திற்கு 8 லட்சம் ரூபா.

அத்துடன், விதவைகளுக்குச் சுயதொழிலை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகத் தையல் இயந்திரம் வழங்கல், பொது மண்டபம் அமைத்தல், அநாதைப் பிள்ளைகளுக்குச் சத்துணவு வழங்குதல், போரூட் நிறுவனம் யு.என்.எச்.சி.ஆர் நிதியிலிருந்து சுகாதாரத் தொண்டர்களின் ஆளுமையை வளர்த்தல், குடும்பத்திட்டம், பாலியல் சம்பந்தமான கருத்தரங்குகளை நடாத்துதல், தையல் இயந்திரம் திருத்தல் பயிற்சிநெறி, வீட்டு மின் இணைப்பு பயிற்சிநெறி, இளைஞர் குழுக்களின் நலன்பேணலுக்காக இளவாலை மேற்கு இளஞ்சுடர் விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் போன்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கசூரினா கடற்கரைப் பகுதியில் கலாசாரத்தைப் பேண நடவடிக்கை

### கடற்கரை அபிவிருத்திச் சங்கம் மேற்கொள்கிறது

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கசூரினா கடற்கரைப் பகுதியில் சமூக முரண்பாடான செயற்பாடுகளில் ஈடுபடுவோர்மீது - கசூரினா கடற்கரை அபிவிருத்திச் சங்கம் கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேற்படி சங்கத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த 20 வருட கால யுத்தத்தால் எமது சமூகம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை யாவரும் அறிவர். எமது சமூகத்தில் எவ்வித பொழுதுபோக்கு வசதிகளும் இல்லை. பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள் கூடப் போதியளவு இல்லை. இவற்றைக் கருத்தில் கொண்டே கசூரினா கடற்கரையைப் புனரமைத்து உல்லாசப் பிரயாணங்களுக்குச் சில சலுகைகளை ஏற்படுத்தி மிகவும் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட நிலைக்குக் கொண்டுவரத் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

ஆனாலும், கலாசார சீரழிவுகளை உருவாக்குவதற்குப் பல வாலிபர்கள் காரணமாக இருக்கிறார்கள் என்பதை இங்கு தெளிவுபடுத்தவேண்டியுள்ளது.

மதுபோதையில் பெண்களோடு தகாதமுறையில் நடந்து கொள்வது, தகாத வார்த்தைப் பிரயோகங்கள் கலாசாரத்திற்கு மாறான உடைகளில் நீராடுவது, தவுக்க மனங்களை முறிப்பது, போத்தல்களை உடைப்பது, சண்டையிடுவது என்பவற்றைத் தவிர்த்துக்கொள்வது உல்லாசப் பிரயாணிகளின் கடமையாகும்.

இவ்வாறான சமூக முரண்பாடான செயற்பாட்டில் ஈடுபடுவோர்மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துக்கொள்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முஸ்லிம்களுக்கு ஆதரவாக கையெழுத்து திரட்ட நடவடிக்கை

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு என்ற கோரிக்கைக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், கிழக்கில் இரண்டு இலட்சம் முஸ்லிம் மக்களின் கையெழுத்துத் திரட்டும் போராட்டத்தைத் தென்கிழக்கு பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான மன்றம் ஆரம்பித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் விடுதலைப்புலிகள், சர்வதேச சமூகம், அரசியற் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த அழுத்தத்தைக் கொடுப்பதே தமது நோக்கம் என்று ஏற்பாட்டாளர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சாய்ந்த மருது பள்ளிவாசலில் ஜும்மா தொழுகைக்குப் பின்பு இந்தப் போராட்டம் வைபவ ரீதியாக நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (07)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்குத்திசையிலிருந்து... - இந்திரஜித்

# நாடாளுமன்ற பிரதி சபாநாயகரின் தெரிவில் ஜனாதிபதி தோற்றுவித்த புதிய அத்தியாயம்



இலங்கையின் ஜனநாயக சோசலிஸ நாடாளுமன்றம் ஒவ்வொரு தடவையும் கூடும் போதும் பிரச்சினையுடனேயே முடிவடைகிறது. இந்த நாடாளுமன்ற அமர்வுகள் ஒவ்வொன்றின் போதும், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும், சிறிலங்கா சுதந்திர கட்சிக்கும், மக்கள் விடு தலை முன்னணிக்கும் இடையில் விரிசல்கள் அதிகமாகிக் கொண்டே போகின்றது.



இந்த விரிசல்கள் காரணமாக அரசாங்கம் அமைக்கும் முன்னர் இந்த இரண்டு கட்சிகளும் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்த மீறலும் அவ்வப்போது இடம்பெற்று வருகிறது. இதில் முதலாவது ஒப்பந்த மீறலாக சமாதான முயற்சிகளை ஜனாதிபதி மீண்டும் ஆரம்பித்த வேளையில், மக்கள் விடுதலை முன்னணியை கலந்தாலோசிக்காதமையாகும். இது தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி அதிருப்தியை வெளியிட்ட போதும் இதனை வெளிப்படையாக தெரிவிக்க முன்வரவில்லை.

அவ்வாறு தெரிவித்தால் அதனை ஐக்கிய தேசியக் கட்சி தமது சந்தர்ப்பவாத அரசியலுக்கு பயன்படுத்திக் கொள்ளும் என்ற அச்சமே இதற்குக் காரணமாகும். எனவே தாம் இந்த சமாதான பேச்சுவார்த்தை விடயத்தில் தலையிடாப்போக்கையே கடைப்பிடிக்கப் போவதாக அந்த முன்னணி தெரிவித்தது.

அதனடிப்படையில் அந்த முன்னணி ஜனாதிபதியின் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான யோசனைகளை ஏற்றுக் கொண்டதோ என்ற சந்தேகம், அந்த முன்னணிக்கு தேர்தலில் வாக்களித்தவர்களுக்கு ஏற்பட்டது. மறுபுறத்தில் ஜனாதிபதியின் தரப்பும் இதனை தமக்கு சாதகமாக பயன்படுத்தி சமாதான நகர்வை மக்கள் விடுதலை முன்னணி ஏற்றுக்கொள்கிறது என்ற கருத்தை வெளியில் உலாவச் செய்தது.

ஐக்கிய தேசிய கட்சியை பொறுத்த வரையில் இது தமது அரசியல் எதிர்காலத்தை இல்லாமல் செய்துவிடும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியது. எனவே அது மக்கள் விடுதலை முன்னணி, தாம் ஆட்சி செய்தபோது எவற்றையெல்லாம் எதிர்த்ததோ, அவற்றையெல்லாம் தற்சமயம் ஆதரித்து வருவதாக பிரசாரம் மேற்கொண்டது.

குறிப்பாக போர் நிறுத்த உடன்பாடு தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி, முன்னர் தீவிர அழுத்தங்களை அன்றைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு கொடுத்து வந்தது. தாம் ஆட்சியில் பங்காளியாக வருவதற்கு முன்னர், போர்நிறுத்த உடன்பாடு திருத்தி அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையைக் கூட அது முன்வைத்தது.

ஆனால் அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் மக்கள் விடுதலை முன்னணிக்கு இவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்துவது சாத்தியமில்லை என்ற உண்மை புரிந்தது. தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், ரணிலின் அன்றைய ஆட்சிக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்பாடானது, உடனடியாக திருத்தக் கூடிய ஒன்றல்ல என்பது மக்கள் விடுதலை முன்னணிக்கு தெரியாத விடயமல்ல.

ஆனால் தாம் தேர்தல் பிரசாரத்தின் போது இவற்றையெல்லாம் கூறினால், வாக்குகளை பெறமுடியாது என்ற காரணத்தினால் அந்த முன்னணி, தேவையற்ற பிரசாரங்களையெல்லாம் அதுவும் சிங்கள மக்களை வெகுவாக கவரக்கூடிய வகையில் செய்து வந்தது.

அதன் அடிப்படையில் தேர்தலில் தாம் நினைத்தபடி வெற்றியையும் அது பெற்றுக் கொண்டது. தற்சமயம் அது இரட்டைவேடம் போடவேண்டிய கட்டாயத்துக்குள் அது சிக்கியுள்ளது. எனினும் தமது இரட்டை வேடப் போக்கை தொடர்ந்தும் முன்னெடுத்து செல்ல முடியாது என்பதால் மீண்டும் தமது முந்திய நிலைப்பாடுகளை அவ்வப்போது கைக்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு அது உட்பட்டுள்ளது.

மறுபுறத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் இந்த நிலைப்பாடு, ரணிலின் ஆட்சியை கைப்பற்றி, அரசியலமைப்பை திருத்தி மேலும் ஆறு ஆண்டு காலத்திற்கு நாட்டை ஆட்சி செய்யலாம் என நினைத்த ஜனாதிபதிக்கு அபாய சங்கு அடிக்கின்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளது. இதனை எவ்வாறு சமாளிக்கலாம் என யோசித்துக் கொண்டிருந்த அவருக்கு தற்சமயம் ஐக்கிய தேசிய கட்சியின் ஞாபகம் வந்திருக்கிறது.

சமாதான முனைப்புகளில் தமிழீழ விடுதலைப் புலிகளை தொடர்ந்தும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. அது சர்வதேச ரீதியில் இலங்கையை, அதுவும் தமது ஆட்சியை பாதிக்கும் என்ற யதார்த்தத்தை ஜனாதிபதி நன்றே உணர்ந்திருக்கிறார். எனவேதான் தற்சமயம் தேவையற்ற கருத்துக்களை வெளியிடாமல் ராஜதந்திர நகர்வுகளை மாத்திரம் முன்னெடுக்க அவர் தலைப்பட்டுள்ளார்.

அதன் அடிப்படையிலேயே மக்கள் விடுதலை முன்னணியுடனான சந்திப்புகளை கூட அவர் தவிர்த்து,அவற்றையெல்லாம் பிரதமமந்திரியின் பொறுப்பில் ஒப்படைத்து வருகிறார்.

நோர்வே ஏற்பாட்டாளர்கள் மீண்டும் இலங்கைக்கு வந்த போது அதனை மக்கள் விடுதலை முன்னணி உள்ளூர எதிர்த்தது.

அது தொடர்பில் அந்த முன்னணி ஜனாதிபதியுடன் பேச்சு நடத்திய போதும் முன்னரைப் போன்று ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க அந்த முன்னணியால் முடியவில்லை. சர்வதேசத்தின் முழுப்பார்வையும் இலங்கையின் சமாதான முயற்சிகளில் இருப்பதால், ஜே.வி.பியின் கொள்கைகளை எல்லாம் ஜனாதிபதியினால் நடைமுறைப்படுத்த முடியவில்லை.



எனவே அந்தக் கட்சியினருக்கு தெரியாமலேயே பல நகர்வுகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்பட்டுள்ளது. அதனைத்தவிர எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியுடனும் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டிய அவசியம் அவருக்கு இருக்கிறது.

தமக்கும் ஐக்கிய தேசிய கட்சி முன்னெடுத்த சமாதான முயற்சிகளுக்கும் பாரிய மாற்றங்கள் இல்லை என்பதை ஜனாதிபதி ஏற்றுக் கொள்கிறார். எனவே சமாதான விடயத்தில் இந்தக் கட்சியுடன் புரிந்துணர்வு ஒன்றுக்கு வருவது சிறந்தது என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாக இருக்கிறது.

இதற்கு வாய்ப்பாக அண்மையில் அவருக்கு சந்தர்ப்பம் ஒன்று கிடைத்தது, அதனை அவர் உரிய முறையில் பயன்படுத்தி இரண்டு கட்சிகளுக்கும் இடையிலான பாரிய இடைவெளியை குறைக்கும் முயற்சியின் முதலாவது கட்டத்தை ஆரம்பித்துள்ளார். பதின்மூன்றாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு கடந்த வாரம் நடைபெற்ற போது இந்த முதலாவது இணக்க கட்டம் நிறைவேறி முடிந்தது.

இதன் பின்னணி என்ன? பிரதிசபாநாயகர் பதவிக்கான போட்டியிலும் பிரதிக்குழுக்களின் தலைவர் போட்டியிலும் அரசாங்கத்துக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கும் இடையில் ஒரு இணக்கப்பாடு பிரதமந்திரிக்கும் கூடத் தெரியாமல் இரகசியமாக எட்டப்பட்டது. ஆறுமுகன் தொண்டமான், மங்கள சமரவீர, அநுரபண்டாரநாயக்க மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் இந்த உடன்பாட்டில் பங்கேற்றனர்.

பிரதிசபாநாயகர் பதவி அரசாங்கத் தரப்புக்கு செல்வதை உறுதிப்படுத்த இலங்கை தொழிலாளர்காங்கிரஸ் வாக்கெடுப்பின் போது ஆதரவாக செயற்படும், அதேநேரம் பிரதிக் குழுக்களின் தலைவருக்கான வாய்ப்பு இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு செல்ல அரசாங்க கட்சி ஆதரவளிக்கும் என்பதே இந்த உடன்பாடாகும்.

இது இரகசிய சந்திப்பாகவே நடத்தப்பட்ட போதும் பிரதமமந்திரிக்கு விடயம் ஏதோ ஒருவகையில் கசிந்து விட்டது. பிரதமர் இது தொடர்பாக ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு இருவரும் தருணத்தை உரிய வகையில் பயன்படுத்தத் தீர்மானித்தனர். எனினும் ஜனாதிபதிக்கு தெரிந்தது போலல்லாமல் பிரதமரே களத்தில் இறங்கினார், தமக்கு தெரியாத இரகசிய ஒப்பந்தம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு தெரியப்படுத்தப்பட்டது.

எனவே ஐக்கிய தேசிய கட்சி இலங்கைத் தொழிலாளர் காங்கிரசை நம்பி குறிப்பிட்ட நாடாளுமன்றப் பதவிகளுக்கு போட்டியிடுவதில்லை என ஐக்கிய தேசிய கட்சிக்கும், பிரதமருக்கும், இடையில் இரகசிய உடன்பாடு எட்டப்பட்டது. ஆனால் இந்த இரகசியம் ஆறுமுகன் தொண்டமானுக்கோ, மங்கள சமரவீர குழுவினருக்கோ தெரியவில்லை. அதன் அடிப்படையில் சம்பவதினம் பிரதிசபாநாயகர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புமாறு சபாநாயகர் சபைக்கு அழைப்பு விடுத்தபோது அரசாங்க கட்சி கீதாஞ்சன குணவர்த்தனவின் பெயரை பிரேரித்தது.

இந்த நிலையில் இதனை ஐக்கிய தேசிய கட்சி தாம் ஏற்றுக் கொள்வதாக அறிவித்த போதே பிரதமருக்கும், ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையிலான உடன்பாடு அனைவருக்கும் தெரியவந்தது. இதனையடுத்து ஏனையவர்களைக் காட்டிலும் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவே அதிகமாக குழம்பிப்போய் விட்டார்.

> **பிரதிசபாநாயகர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புமாறு சபாநாயகர் சபைக்கு அழைப்பு விடுத்தபோது அரசாங்க கட்சி கீதாஞ்சன குணவர்த்தனவின் பெயரை பிரேரித்தது. இந்த நிலையில் இதனை ஐக்கிய தேசிய கட்சி தாம் ஏற்றுக் கொள்வதாக அறிவித்த போதே பிரதமருக்கும், ஐக்கிய தேசிய கட் சிக்கும் இடையிலான உடன்பாடு அனைவருக் கும் தெரியவந்தது. இதனையடுத்து ஏனைய வர்களைக் காட்டிலும் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளு மன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவே அதிகமாக குழம் ப்பிப்போய் விட்டார்.**

தமது எதிர்ப்பை நேரடியாகவே காட்டும் வகையில் பிரதமமந்திரியை திட்டும் அளவிற்கு அவர் கோபமடைந்தார். எனினும் பிரதமமந்திரி இதனை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. தாம் மேற்கொண்ட நடவடிக்கையின் மூலம் குறிப்பிட்ட இரண்டு நாடாளுமன்ற பதவிகளையும் பெற்றுக் கொள்வது மட்டுமல்லாமல் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கவும் திட்டமிட்டமை தகர்ந்து போனமையே விமல் வீரவன்சவுக்கு அதிகமான கோபத்தை வரவழைத்து விட்டது எனலாம்.

விமல் வீரவன்சவின் திட்டம் நிறைவேறியிருக்குமானால்,அன்றுடன் தொண்டமானும் அவரின் குழவினரும் ஆளும் கட்சியில் இணைந்திருப்பர். திட்டம் தோல்வியடைந்தமையால் அவர்களின் கனவும் தகர்ந்து போனது. இந்த விடயத்தில் ஜனாதிபதியை பொறுத்தமட்டில் மாற்றுத்திட்டம் இருந்தமையால் அவர் அதனைக் கண்டுகொள்ளவில்லை.

ஏற்கனவே அவர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் குழவினரை தம்வசப்படுத்தி விட்டமையால் தொண்டமானை பற்றி பெரிதாக அவர் நினைக்கவில்லை. ரவூப் ஹக்கீமை தரங்குறைக்கும் வகையில் அரசாங்க கட்சி பெண் ஒருவரின் விவகாரத்தை முன் கொண்டு சென்று அதன் மூலம் அந்தக் கட்சியில் இருந்து நால்வரை தமது பக்கம் கொண்டு வருவதில் இதுவரை ஒரளவு வெற்றிக்கண்டுள்ளார். இந்த நால்வரும் அரசாங்கத்தில் நேரடியாக இணையாவிட்டாலும் அரசாங்கத்துக்கு ஆதரவானவர்களாக மாற்றப் பட்டுள்ளனர் என்பது உண்மை.இந்த நிலையில் ஜனாதிபதி மக்கள் விடுதலை முன்னணியை தவிர்த்து, ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து கூட்டாட்சி ஒன்றை ஏற்படுத்த விரும்புகிறார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவ்வாறான ஒரு நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே சமாதான முயற்சியை கொண்டு செல்ல முடியும். அதேநேரம் மக்கள் விடுதலை முன்னணியின் கொட்டத்தையும் அடக்க முடியும் என அவர் எண்ணம் கொண்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்கு முன்னோடியாக விரைவில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப் படலாம் எனவும் ஜனாதிபதி இதற்காக நோர்வேயின் உதவியை நாடலாம் என்றும் பிரதமமந்திரிக்கு நெருக்கமான தரப்புகள் தெரிவித்துள்ளன.

எது எப்படியிருப்பினும் சமாதான முன்னெடுப்புகள் உரிய முறையில் சென்றால் மாத்திரமே இலங்கைக்கு நிதி உதவிகிடைக்கும் என யசுகி அகாசி மீண்டும் நினைவூட்டியிருப்பது அரசாங்கத்துக்கு ஒரு எச்சரிக்கையே என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ❑

## விவசாயிகள் நன்மை கருதி வாராந்த சந்தை நடைமுறை

விவசாயிகளின் நன்மை கருதி வாராந்த சந்தை முறை கிளிநொச்சியில் அறிமுகப் படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கிளிநொச்சி விவசாய அமைப்புக்கள் பலவும் அரச அதிபர் கே. இராசநாயகத்திற்கு விடுத்த வேண்டு கோளையடுத்தே இவ்வாரச் சந்தை நடைமுறைக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

தென்னிலங்கைக்கு வடபகுதி விவசாய உற்பத்தி பொருட்களை ஏற்றுமதி செய்வதில் உள்ள சிரமங்களின் காரணமாக உற்பத்தியாளர்கள் அடையும் நட்டத்தை கருத்திற் கொண்டே இந்த வாராந்தச் சந்தை முறை அறிமுகப்படுத்தப் படவுள்ளது.

இதன் மூலமாக வடபகுதி விவசாய உற்பத்திப் பொருட்களை உடனுக்குடன் தென் பகுதிக்கு அனுப்பி வைக்க கூடியதாக இருக்குமெனவும், இதன் மூலமாக உற்பத்திகளின் அளவை அதிகரிக்க முடியுமெனவும் நம்பப்படுகிறது.

தற்பொழுது சில தனியார் வாகன உரிமையாளர்களே வாழைக்குலை, பழவகை போன்ற உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்து தென்பகுதி ஏற்றுமதி செய்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளர்ச்சிக் குழுவினரின் தாக்குதலில் உகண்டாவில் 42 பொதுமக்கள் பலி



உகண்டாவின் வடக்குப்பகுதியில் அமைந்துள்ள லொகொடி கிராமத்தில் கிளர்ச்சிக்குழு ஒன்று நடத்திய தாக்குதலில் 42 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

பொதுமக்கள் மீது இந்த கிளர்ச்சிக்குழுக்கள் வாள்களினால் வெட்டியும், பொல்லுகளினால் அடித்தும் தாக்குதல்களை மேற்கொண்டன.

இந்தத் தாக்குதலில் 25 பொது மக்களே உயிரிழந்ததாக உகண்டாப் படையினர் தெரிவித்தனர். ஆனால், வெவ்வேறு இடங்களில் கிளர்ச்சிக் குழுக்கள் நடத்திய தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டதாக இந்தச் சம்பவங்களிலிருந்து தப்பிய பொதுமக்கள் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமையும் இந்தக் கிளர்ச்சிக்குழு இடம் பெயர்ந்த மக்களின் முகாம் ஒன்றின் மீது நடத்திய தாக்குதலில் 50 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக பி.பி.சியின் செய்தியாளர் தெரிவித்தார்.

லொகொடி கிராம மக்களின் வீடுகள் நெருக்கமின்றிக் காணப்படுவதனால் மக்களுக்கான முழுமையான பாதுகாப்பை படையினரால் வழங்கமுடியாது இருப்பதாக உகண்டாவின் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

பொதுமக்கள் மீது வன்செயல்களைக் கட்டவிழ்த்துவிடும் பல கிளர்ச்சிக்குழுக்களுக்கு அண்மையில் தம்மால் மன்னிப்பு அளிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவம் தெரிவித்தது.

18 ஆண்டுகளாகத் தொடரும் உகண்டாவின் உள்நாட்டுப் போரில், இராணுவத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையை உகண்டா மக்கள் இழந்துள்ளதாக ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

# ஸ்பெயின் இளவரசர் திருமணத்தில் 1500 முக்கியஸ்தர்கள் பங்கேற்பு



ஸ்பெயின் தலைநகர் மட்றிட்டில் அந்த நாட்டு இளவரசர் பிலிப்பியின் திருமண வைபவத்தில் 1500, உலகின் முக்கியமானவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இளவரசர் பிலிப்பி - லென்ரிஷியா ஒரிஷ் என்ற அரச குடும்பத்தைச் சாராத பெண்ணைத் திருமணம் செய்துள்ளார்.

மில்லியன் கணக்கான மக்கள் இந்த விழாவில் பங்கு கொள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஐரோப்பாவின் மிகப்பெரிய திருமணம் இதுவெனக் கருதப்படுகின்றது.

திருமண நிகழ்வில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 20 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. திருமணத்தின் பின் நடத்தப்படவுள்ள சமயச் சடங்குகளை மட்றிட் ரயில் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு சமர்ப்பணம் செய்யுமாறு இளவரசர் பிலிப்பியும், ஒரிஷ்சும் கேட்டுள்ளனர்.

உலகின் பலநூறு மில்லியன் வரையான மக்கள் தொலைக்காட்சியில் இந்த நிகழ்வைப் பார்வையிடவுள்ளனர்.

# ஜப்பான் பிரதமர் கொய்சுமி வடகொரியாவிற்கு விஜயம்

(ஜப்பான்)

ஜப்பான் பிரதமர் யுனிசிரோ கொய்சுமி வட கொரியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

அங்கு அவர் வட கொரிய ஜனாதிபதி கிம் ஜொங் இல்லுடன் வட கொரியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜப்பானியர்கள் தொடர்பாகக் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் வடகொரியாவால், விடுவிக்கப்பட்ட எட்டு ஜப்பான்நாட்டவர்களின் உறவினர்கள் தொடர்ந்தும் வடகொரியாவிலே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

90 நிமிடங்கள் வரையில் நடைபெற்ற பேச்சுக்களின் முடிவுகள் இதுவரை தெளிவாக அறிவிக்கப்படவில்லை. இருவரிடையேயான உரையாடலின்போது அணுவாயுதச் செயற்பாடுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

ஜப்பானியப் பிரதமர் வட கொரியாவின் 'பொயோங்யாங்' விமான நிலையத்தினை அடைந்தபோது சிறந்த வரவேற்பு அளிக்கப்படவில்லை. ஜப்பானிய தேசியக் கொடி பறக்கவிடப்படவில்லை. அத்துடன் ஜப்பானிய தேசிய கீதம் இசைக்கப்படவில்லை.

மேலும், 2002 ஆம் ஆண்டு ஜப்பானியப் பிரதமர் வட கொரியா சென்று ஜப்பான் திரும்பும்போது விடுவிக்கப்பட்ட ஐவருடன் திரும்பியிருந்தார். இந்த முறை அவர்களின் ஏழு குழந்தைகளையும் ஜப்பானுக்கு அழைத்துச் செல்லும் நம்பிக்கையைக் கொண்டுள்ளார். ஜப்பான் நாட்டவர்கள் வட கொரியாவில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ள விவகாரம் ஜப்பானிய அரசியலில் முக்கிய பங்கினை வகித்து வருவதாகவும், இதனால், ஜப்பானுக்கும் வட கொரியாவுக்கும் இடையிலான இராஜ தந்திர உறவுகள் பாதிப்படைந்துள்ளதாகவும் பி.பி.ஸியின் செய்தியாளர் தெரிவித்தார்.



# பாஃரேன் உள்துறை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்



பா.ஃரேன் உள்துறை அமைச்சர் செக் முகமட் பின் கலிபர் அந்த நாட்டு மன்னரினால் பதவியிலிருந்து நேற்று முன்தினம் நீக்கப்பட்டார்.

சியா முஸ்லிம்களினால் ஈராக்கில் அமெரிக்க இராணுவத்தினரின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களைப் பொலிஸார் தடுக்க முற்பட்டிருந்தனர். இதனால் ஆத்திரமடைந்த மன்னர் உள்துறையமைச்சரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான உத்தரவினை வழங்கியிருந்தார்.


ஈராக்கில் புனித பள்ளிவாசல்கள் மீதும், நஜாப் நகர்மீதும் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களினால் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஆத்திர உணர்வுடன் பங்குகொள்வதற்கு விரும்புவதாக மன்னர் தெரிவித்திருந்தார்.

பா.ஃரேன் தலைநகர் பனமாவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில், ஏற்பட்ட வன்முறைகளில் 20 பேர் காயமடைந்தனர். உள்நாட்டு அமைச்சரைப் பதவியிலிருந்து நீக்கியது தொடர்பாக மேலும் தெரிவித்த மன்னர் -

அராபியர்களுக்கும் இஸ்லாமிய மதத்துக்கெதிராகவும் பலஸ்தீனம், ஜெருசலேம் ஆகிய இடங்களில் மேற்கொண்ட வன்முறைகளுக்கும், ஈராக்கில் கைதிகள் துன்புறுத்தப்பட்டமைக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமை மக்களுக்கு உள்ளது எனத்தெரிவித்தார்.

பா.ஃரேன் தலைநகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் 5 ஆயிரம் மக்கள் பங்குகொண்டிருந்தனர்.





இந்திய அமைச்சரவை நேற்று பதவியேற்றபோது கலந்து கொண்ட அனைத்துக் கட்சித் தலைவர்கள் மற்றும் அமைச்சர்களை முதற்படத்திலும், பிரதமராகப் பதவியேற்ற பின் மன்மோகன்சிங் உள்துறை அமைச்சராகப் பதவியேற்ற பிரணாப் முகர்ஜியுடன் கலந்துரையாடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# பாக்தாத்தில் தற்கொலைத் தாக்குதல் ஐந்து படையினர் கொல்லப்பட்டனர்!

## உள்துறை அமைச்சரும் படுகாயம்



பாக்தாத்தில் நேற்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் குறைந்தது ஐவர் கொல்லப்பட்டு பலர் படுகாயமடைந்துள்ளனர்.

ஈராக்கின் உள்துறை அமைச்சர் அப்துல் ஜபார் யூசுப் அல் செகிலியின் வதிவிடத்துக்கு முன்னாலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. காரொன்றில் வந்த ஒருவர் உள்துறை அமைச்சரின் வீட்டிற்கு முன்னால் அதனை வெடிக்க வைத்துத் தானும் உயிரிழந்தார்.

இந்தத் தாக்குதலில் உள்துறை அமைச்சர் - தலையிலும், மார்பிலும் காயமடைந்த போதிலும் அவருக்கு உயிராபத்து இல்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், உள்துறை அமைச்சரின் குடும்ப அங்கத்தவர்கள் பலரும் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் உள்துறை அமைச்சரின் மெய்ப்பாதுகாவலர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதல் இடம்பெற்றவுடன் வீதியிலிருந்த பல வாகனங்கள் தூக்கி வீசப்பட்டுச் சிதறிக் காணப்பட்டன.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் அனைத்தும் போர்வைகளால் போர்த்தப்பட்டு சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு அருகிலுள்ள தோட்டமொன்றில் வைக்கப்பட்டிருந்ததாக ரொய்ட்டர் செய்தி நிறுவன செய்தியாளர் தெரிவித்தார்.

ஜூன் 30 இல் ஆளும் அதிகாரங்கள் கையளிக்கப்படவுள்ள நிலையில் அதற்கு முதல் மேலும் இந்த வகையான தாக்குதல்கள் நிகழ்த்தப்படலாமென ஈராக்கிய மக்களும், ஆளும் சபை உறுப்பினர்களும் அச்சமடைந்துள்ளதாக பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

கடந்த ஒரு வாரத்தில் ஈராக்கில் இடம்பெற்ற இரண்டாவது தற்கொலைத் தாக்குதல் இதுவாகும். கடந்த திங்கட்கிழமை பாக்தாத்திலுள்ள அமெரிக்கக் கூட்டுப் படையின் தலைமையகத்துக்கு முன்னாள் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் ஈராக்கிய ஆளும் சபைத் தலைவர் சலீம் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# பலஸ்தீன ரபா நகருக்குள் மீண்டும் இஸ்ரேலியப் படையினர் பிரவேசம்

(இஸ்ரேல்)

இஸ்ரேலியப் படையினர் மீண்டும் ரபாவில் பிரவேசித்துள்ளனர். ஆயுதக் கடத்தல்களை நிறுத்துவதற்காகவே மீளவும் அந்தப் பகுதிக்குள் பிரவேசித்தாக அவர்கள் தெரிவித்தனர்.

தாங்கிகளும், புல்டோசர்களும் காஸா நகரின் கிழக்குப் பிரதேசத்தில் பிரவேசித்துள்ளன. மூன்று வயதுக் குழந்தையொன்று இனிப்பு வாங்குவதற்காகக் கடைக்குச் சென்ற வேளையில், துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி உயிரிழந்தது.

நேற்று மேற்குக் கரைப் பிரதேசத்தில் இஸ்ரேலிய காவல் நிலையமொன்றில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட வேளை, படை வீரர் ஒருவர் காயமடைந்துள்ளதாக இஸ்ரேலிய வானொலி தெரிவித்தது. நேற்று முன்தினம் இஸ்ரேலியப் படையினர் ரபாவின் ஒரு பகுதியிலிருந்து வெளியேறியிருந்தனர்.

இந்தப் பிரதேசத்தில் இஸ்ரேலியப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 40 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருந்தனர். அத்துடன் இந்தப் பகுதிக் குடியிருப்புக்கள் அழிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புதிய காங்கிரஸ் அரசாங்கம் 'பொடா'வை ரத்துச் செய்கிறது

(புதுடெல்கி)

பொடா சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று தி.மு.க உள்ளிட்ட தமிழக கட்சிகள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்தச் சட்டத்தை ரத்துச் செய்ய காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளதாவது -

தீவிரவாதத்தை ஒழிப்பதில் சமாதானம் என்ற பேச்சுக்கே இடமிலலை. இருப்பினும், கடந்த இரண்டு ஆண்டுகளாக 'பொடா' சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது.

அதைத் தடுக்க இந்தச் சட்டத்தையே ஐக்கிய முற்போக்கு கூட்டணி ரத்துசெய்யும். தற்போதுள்ள சட்டங்களின் அடிப்படையிலேயே தீவிரவாதம் கடுமையாக எதிர்க்கப்படும்.

பாதுகாப்புத்துறையை நவீனமயமாக்குவதில் முட்டுக்கட்டையாக உள்ள எல்லா தாமதங்களும் நீக்கப்படும். இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி, அவற்றிற்காகவே முழுமையாகச் செலவு செய்யப்படும்.

தேசிய பாதுகாப்புச் சபை முழுமையான அமைப்பாக மாற்றப்படும். முழுநேர தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவி உருவாக்கப்படும் என்று இதில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## ஆசிய அபிவிருத்தி வங்கியின்

# துணைத் தலைவர் இலங்கை வருகிறார்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் துணைத் தலைவர் லிகுயுள் ஜின் மூன்று நாள் விஜயமாக அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளார்.

இது தொடர்பாக, ஆசிய அபிவிருத்தி வங்கியில் நேற்றுமுன்தினம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும தெரிவிக்கப்பட்டதாவது -

எதிர்வரும் புதன்கிழமை கொழும்புக்கு வரும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் துணைத் தலைவர் லிகுயுள் ஜின் வெள்ளிக்கிழமை வரை - மூன்று நாட்கள் இலங்கையில் தங்கியிருப்பார்.

இங்கு தங்கியிருக்கும்போது இவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதியமைச்சர் சரத் அமுனுகம, ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

அத்துடன், ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் தெற்கு, மத்திய மற்றும் வடமாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களையும் இவர் நேரில் பார்வையிடவுள்ளார்.

இவருடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின், தெற்காசிய நடவடிக்கைகளுக்கான பணிப்பாளர் நாயகம் யொஷிஹிரோ, இவாசாகியும் வரவுள்ளார்.

இதேவேளை, இவர்கள் கிளிநொச்சிக்கு விஜயம்செய்து அங்கு நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து விடுதலைப் புலிகளுடனும் பேச்சு நடாத்தலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# சந்திரனும் வெள்ளியும் இணைந்து வானத்தில் அபூர்வகாட்சி



நேற்று முன்தினம் இரவு வானத்தைப் பார்த்த பலரும் வியப்பில் ஆழ்ந்தனர். சந்திரனும், வெள்ளியும் ஒரே நேர்கோட்டில் வித்தியாசமான நிலையில் காட்சியளித்தன.

வழக்கமாக வெள்ளிக்கிரகம் அதிகாலையில்தான் கண்களுக்குத் தெரியும். அதே விடிவெள்ளி எனப்படுகின்றது. சில சமயங்களில் வெள்ளிக் கிரகம் பார்ப்பதற்கு நட்சத்திரம் போல பிரகாசமாய் இருக்கும்.

நேற்றுமுன்தினம் இரவு சந்திரனும், வெள்ளியும் ஒரே நேர்கோட்டில் வித்தியாசமான கோணத்தில் காணப்பட்டன. அழகிய பிறையும், அதன்மேலே வெள்ளியும் காணப்பட்டது.

பார்ப்பதற்கு அரிவாள்போல காணப்பட்ட இந்த அபூர்வ காட்சியை மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

பிறையின்மேலே காணப்பட்டது நட்சத்திரம் எனப் பலரும் நினைக்கிறார்கள். ஆனால் அது வெள்ளிக் கிரகம் ஆகும். இதுபோன்ற அபூர்வ காட்சி அரிதாக நடக்கும் என வானியலாளர்கள் தெரிவித்தனர்.

# நினைவுக்கல் திரைநீக்கம்

(கிளிநொச்சி)

1-5-2002 அன்று தமிழீழ கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் வீரச்சாவடைந்த கடற்கரும்புலி மேஜர் அறிவுச்செல்வன் அல்லது வசந்தன் என்று அழைக்கப்படும் நாககொட்டியான், உமையாள்புரம், கிளிநொச்சியை சொந்த முகவரியாகவும், ஆனைவிழுந்தான், அக்கராயனை தற்காலிக முகவரியாகவும் கொண்ட வைரமுத்து - மனோகரன் என்ற மாவீரரின் திருவுருவப்படம் மக்கள் வணக்கத்துக்காக அவரது இல்லத்தில் நேற்று வைக்கப்பட்டது. இன்று நண்பகல் ஆனைவிழுந்தான் பாடசாலையில் இந்த மாவீரரின உருவப்படம் இறுதி வணக்கத்துக்காக வைக்கப்பட்டு கிளிநொச்சிகனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் நினைவுக்கல் திரை நீக்கம் செய்யப்படும்.

# நவாலி அட்டகிரி பாடசாலையில் இன்று இலவச சட்ட உதவிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் - சட்ட உதவி மன்றத்தின் சட்ட உதவிக் கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு நவாலி அட்டகிரி பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதில், சிறுவர்களின் உரிமை, மனித உரிமை, பெண்கள் உரிமை, இடம் பெயர்ந்தோர்கள் உரிமை, முதியோர் உரிமை என்பன பற்றிய விளக்கங்கள் சட்டத்தரணிகளால் வழங்கப்படவுள்ளது.

அத்துடன், இடம் பெயர்ந்தோர், மீளக்குடியமர்ந்தோர், குற்றச் செயலகளால் பாதிக்கப்பட்டவர்கள், மனித உரிமைகளால் பாதிக்கப்பட்டோர், முதியவர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளோர், வெளிநாடுகளில் பணிபுரிந்து பாதிக்கப்பட்ட பெண்கள் ஆகியோருக்கான சட்ட உதவிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

தேவையேற்படுமிடத்து சட்ட உதவிமன்றத்தினால் இலவசமாக வழக்குகளும் நடத்தப்படும்.

மேலும், உள்ளூரில் இடம் பெயர்ந்தோர்களினதும, இலங்கையின் பிற மாவட்டங்களிலிருந்தும், இந்தியாவின் முகாம்களில் இருந்தும் மீளக் குடியேறியவர்களினதும், வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளோரினதும் தேசிய அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்கள், காணாமற்போன உறுதிகள் என்பனவும் இலவசமாகப் பெற்றுக் கொடுக்கப்படும்.

சட்ட உதவி மன்றத்தினால் நடத்தப்படும் இந்தக்கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக நீதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பான அறிவுறுத்தல்களும் வழங்கப்படவுள்ளதால் அனைவரையும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றிப் பயனடையுமாறு சட்ட உதவிமன்ற ஒருங்கிணைப்பாளர் சாந்தா அபிமன்னசிங்கம் அறிவித்துள்ளார்.

## இந்தியாவின்....

அத்துடன், முன்னாள் துணைப் பிரதமர் அத்வானியும் கலந்து கொண்டார். அவருக்கு அருகே திராவிட முன்னேற்ற கழகத் தலைவர் கருணாநிதி அமர்ந்திருந்தார்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா உட்பட கூட்டணிக் கட்சிகளின் அனைத்துத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

பிரதமர் மன்மோகன் சிங் தவிர 28 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும், 40 பேர் இணை அமைச்சர்களாகவும் பதவியேற்றனர். இந்த 28 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களில் 6 பேர் தி.மு.க கூட்டணியைச் சேர்ந்த தமிழ்நாட்டிலிருந்து தெரிவான அமைச்சர்களாவர்.

28 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களில் முக்கிய அமைச்சுப் பொறுப்புக்கள் கிடைக்கவுள்ளவர்களின் பெயர் விபரம் வருமாறு -

பிரதமர் மன்மோகன் சிங்கே நிதித்துறையையும் கவனித்துக் கொள்வார். பிரணாப் முகர்ஜி - உள்துறை அமைச்சராகவும், சிவராஜ்பட்டேல் - பாதுகாப்பு அமைச்சராகவும், ஜெய்பால்ரெட்டி - செய்தி, ஒளிபரப்புத்துறை அமைச்சராகவும், நட்வர்சிங் - வெளியுறவுத்துறை அமைச்சராகவும் பதவியேற்றனர்.

28 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச் சர்களில் 18 பேர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் காங்கிரஸிற்கு அடுத்தபடியாக தி.மு.கவிற்குத்தான் 3 அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வறுமையைக் குறைப்பதும், பொருளாதாரத்தை சீர்திருத்துவதுமே தனது கூட்டணி அரசின் முக்கிய பணியென பதவியேற்றபின் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

## இந்தியாவுடன்...

ஆனாலும் இந்தியாவின் பிற தென்னாசிய நாடுகள் இவ்வாறான கோரிக்கை எதையும் முன்வைக்கவில்லை. வரும் நாட்களில் இவை இந்தியாவிடம் இவ்வாறான கோரிக்கையை முன்வைக்கவுள்ளன.

இதனிடையே தனது வெளியுறவுக் கொள்கை தொடர்பாக நேற்று கருத்துத் தெரிவித்த பிரதமர் மன்மோகன்சிங்,

தனது அரசாங்கம் சகல அயல் நாடுகளுடனும் உறுதியான வெளியுறவுக்கொள்கையை கடைப்பிடிக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

அடுத்த சில நாட்களில் இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் புதுடெல்கி சென்று - வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங்குடன் பேச்சு நடத்தவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## நடந்துசென்ற....

நேற்று மதியம் செந்தில்நாதசர்மாவும் அவரது உறவினரும் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயம் அது கட்டுப்பாட்டை இழந்து வீதியில் சென்று கொண்டிருந்த இராணுவச்சிப்பாய் மீது மோதியது. இதனால், இராணுவச் சிப்பாய் கைதடிப் பாலத்தில் உள்ள கம்பிமீது மோதி, தலையில் படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற நபரும் படுகாயமடைந்தார். இவர் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

காயமடைந்த இராணுவச் சிப்பாய் சிகிச்சைக்காக இராணுவ வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்டார்.

இந்த விபத்துத் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (தீ)

# விடுதலை நூல் அறிமுக விழா திருகோணமலையில் இன்று !

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய விடுதலை நூலின் அறிமுக விழா இன்று திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

இன்று மாலை 4.00 மணிக்கு திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை வெளியீட்டுரையினை நிகழ்த்துவார்.

தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன் நூலை வெளியிட்டுவைப்பார். நூலின் முதல் பிரதியினை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனும், சிறப்புப் பிரதியினை நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கமும் பெற்றுக் கொள்வார்கள்.

திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தேசியக் கொடியை சிவகுமார் ஏற்றிவைப்பார். திருமலை மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் செல்வி காருண்யா வரவேற்புரையையும், அறிமுக உரையை ஆ.ஜதீந்திரா வும், மதிப்பீட்டுரைகளை சட்டத் தரணி கா.சிவபாலன், அதிபர் சி.தண்டாயுதபாணி, வைத்தியர் இ.தர்மராஜா ஆகியோர் நிகழ்த்துவர். (04)

## கிறிஸ்பற்றனை.....

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் சூழலில் - ஐரோப்பிய ஒன்றியத்திடம் நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான பேச்சுக்களை நடத்தவே லக்ஷ்மன் கதிர்காமர் பிரஷெல்ஸ்சுக்குச் செல்லவுள்ளதாகத் தெரிய வருகிறது.

தனது பிரஷெல்ஸ் விஜயத்தின் போது - கதிர்காமர் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் பல்வேறு இராஜதந்திரிகளையும் சந்திப்பார் என்று கூறப்படுகிறது.(01)

## புலிகள்.....

விடுதலைப் புலிகள் வன்முறை மற்றும் இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டைக் கைவிடாத பட்சத்தில் - இந்த இயக்கத்தின் நடவடிக்கைகள் காரணமாக, இந்திய இறையாண்மைக்கு ஆபத்து ஏற்படும் என்பதால், புலிகள் இயக்கம் சட்ட விரோதமான இயக்கம் என்று இந்திய மத்திய அரசு பிரகடனப்படுத்தியுள்ளது.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றிநவிலலும்

**நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாய் இருக்கிறேன்**
**என்னை விசுவாசிக்கின்றவன் மரித்தாலும் பிழைப்பான்**

தோற்றம் 26 - 05 - 1918



மறைவு 23 - 04 - 2004

திருமதி
## பிலோமினா சின்னத்தங்கம் வேலும்மயிலும்

*(ஓய்வு பெற்ற ஆசிரியை)*

மாதம் ஒன்று ஆனதம்மா
மனங்கள் இங்கு கலங்குதம்மா
கலகலக்கும் உன் குரல் ஓய்ந்ததம்மா
கண்முன்னே மலையொன்று சரிந்ததம்மா
பாசமிகு பிள்ளைகளும் மருமக்களும்
பேரர்களும் பூட்டப் பிள்ளைகளும் கதறியழ
பாசவலை உன்மீது விழுந்தது ஏனம்மா...?

உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் இறுதிச் சடங்கில் பங்குபற்றித் துக்கம் பகிர்ந்தோருக்கும், மலர்வளையம் சாத்தியோருக்கும், தபால் தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தோர் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், அன்னாரது இல்லத்தில் இன்று நடைபெறும் விருந்துபசாரத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*மயிலங்காடு,*
*ஏழாலை தெற்கு,*
*சுன்னாகம்.*

பாக்கியநாதர் வேலும்மயிலும் (மருமகன்)
மனோகரன் (மகன்)
மனோரஞ்சி (மகள்)

(சி-2578)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகத்தில் தலை நிமிர்ந்து நிற்கும் தமிழரின் சொத்தான தமிழீழ வைப்பகம்

**தமிழரின் சொத்து எனப் பெருமையுடன் தலை நிமிர்ந்து நிற்கும் தமிழீழ வைப்பகம் இன்று தனது பத்தாவது ஆண்டில் கால்பதித்து நிற்கின்றது.**

**தமிழ் மக்களின் பொருண்மிய வல்லமையைவலுப்படுத்த வேண்டும். அதற்காக வைப்பக அமைப்பொன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற கருத்தை எமது தேசியத் தலைவர் அவர்கள் நீண்டகாலமாகக் கொண்டிருந்தார். இக்கருத்திற்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில் 1994 ஆம் ஆண்டில் தமிழீழ வைப்பகம் உதயமானது.**

**தமிழ் மக்களின் அழிவுக்குள்ளான பொருளாதார இருப்பை மீண்டும் கட்டியெழுப்ப உதவு வதனூடாக தமிழ் மக்களின் காப்பகமாக இருக்கவேண்டும் என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் இது ஆரம்பிக்கப்பட்டது.**

**பத்தாவது ஆண்டுகள் தனது செயற்பாட்டை நிறைவு செய்துள்ள தமிழீழ வைப்பகம் தமிழர்கள் தமிழீழ மண்ணில் பொருளாதார வலுவுடன் வளர்வதற்கு முதுகெலும்பாக இருக்கும் என்பது உறுதி.**

எமது அமைப்பு இன விடுதலைப் போராட்டத்தையே முன்னெடுத்துச் செல்கின்றது. அதனோடு இணைந்த வகையில் தமிழர்களது பொருண்மியத்தை மேம்படுத்தும் வகையில் தமிழீழ வைப்பகம் உருவாக்கப்பட்டது.

குறிப்பாகச் சொல்வதானால் எமது தேசியத்தலைவர் அவர்கள் நீண்டகாலமாகவே தமிழர்களது பொருண்மிய வல்லமையை மேம்படுத்தல் வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். அதன் விளைவே தமிழீழ வைப்பக மாகும்.



இதேபோன்றே ஏனைய நிர்வாகக் கட்டமைப்புக்களும் உருவாக்கப்பட்டுள்ளது.

இன்றைய உலக ஒழுங்கில் பொருள் வல்லமை எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகின்றது என்பதைக் காண்கிறோம். உலக அரசியலைத் தீர்மானிக்கின்ற வலுவை பன்னாட்டு வைப்பகங்கள் கொண்டுள்ளன. தமிழ்த்தேசியத்தை உருவாக்கும் மூலவிசைகளில் ஒன்றாகத் தமிழர்களுக்கென வைப்பகம் ஒன்றை உருவாக்கும் என்னக்கரு தோற்றம் பெற்றது. இதன் விளைவு தமிழீழ வைப்பகமாகும். தமிழர்களின் நிதித் திரட்சியை மையமாகக் கொண்ட தமிழீழ வைப்பகமானது பத்தாவது ஆண்டை நிறைவுசெய்து பதினொராவது ஆண்டினை நோக்கிச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

1994 ஆம் ஆண்டு மே திங்கள் 23 ஆம் நாள் கஸ்தூரியார் சாலை, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம் என்னுமிடத்தில் தமிழீழக் கல்விக்கழகப் பொறப்பாளர் திரு. வெ. இளங்குமரன் அவர்களால் முறைப்படி தொடங்கி வைக்கப்பட்டது. தமிழீழ வைப்பகத்தின் நிர்வாகக் கட்டமைப்பு, செயற்பாடு என்பன ஏற்றுக்கொள்ளப்பட வைப்பக நடைமுறைகளிற்கமையவே உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழீழ மக்களைப் பொறுத்தவரை நெடுங்காலமாகவே சேமிப்பு, சிக்கனம் என்பன அவர்களது குணாம்சங்களாக இருந்து வருகின்றது. அத்தகைய பண்புகளுக்கூடாக நிறுவனமயப்படுத்தப்பட்ட சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்து வதன் மூலம் அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்து வதுடன், நாட்டின் முதலீட்டுத்துறையை மேம்படுத்தக் கூடிய கடன் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகிறோம். இதுவரை காலமும் அறிமுகம் செய்யப்பட்ட வைப்புத் திட்டங்களாக -

- **வளர்ந்தோர் தேட்ட வைப்புத் திட்டம்**
- **சிறுவர் தேட்ட வைப்புத் திட்டம்**
- **சாதாரண நிலையான வைப்புத் திட்டம்**
- **வெளிவரவு நிலையான வைப்புத் திட்டம்**
- **சிறார் உண்டியல் தேட்ட வைப்புத் திட்டம்**
- **ஊற்றுக்கண் பெண்கள் தேட்ட வைப்புத் திட்டம்**
- **ஊற்றுக்கண் தேட்டச்சான்றிதழ்த் திட்டம்**
- **அமுதம் சிறார் தேட்டத் திட்டம்**
- **தாயக ஒளி வதியாதோர் நிலையான வைப்புத் திட்டம் போன்றவற்றையும்**

**கடன் திட்டங்களாக -**

- **நகையடைவுக்கடன் திட்டம்**
- **வாணிபக்கடன் திட்டம்**
- **மேம்பாட்டுக் கடன் திட்டம்**
- **சுழற்சி முறையிலான வாணிபக்கடன் திட்டம்**
- **சுயதொழில் முயற்சிக் கடன் திட்டம்**
- **சமூக பொருண்மிய மேம்பாட்டுக் கடன் திட்டம்**
- **கதிரொளி மின்னாக்கத் தொகுதிக் கடன் திட்டம்**

என்பவற்றையும் குறிப்பிட்டுக் கூறலாம். சமூக பொருளாதார மேம்பாடு கருதி தமிழீழ வைப்பகத்தால் காலத்திற்குக்காலம் வெவ்வேறு கடன் திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக சுயதொழில் வேலைவாய்ப்புக்கடன் திட்டம், உழுபொறிகள் கடனாக வழங்கும் திட்டம், கதிரொளி மின்னாக்கத் தொகுதிக் கடன் திட்டம், தையல் இயந்திரங்களை உழைப்பாளர்களை இழந்த பெண்களிற்கு கடனாக வழங்கும் திட்டம் என்பவற்றினூடாக சமூகமேம்பாட்டில் தமிழீழ வைப்பகம் தனது பங்கை சிறப்பாக ஆற்றிவருகிறது.

குறிப்பாக சொல்வதானால் போர் அனர்த்தங்களால் எமது பிரதேசத்தின் சமூகக் கட்டமைப்புக்கள் மிகவும் பாதிப்படைந்த நிலையில் இருப்பது அனைவரும் அறிந்த ஒன்று. அத்தகைய சமூகத்தேவைகளைக் கருத்தில் கொண்டே உழைப்பாளர்களை இழந்த பெண்களுக்கு பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்துடன் இணைந்து, தையல் இயந்திரங்களைக் கடனாக வழங்குவதோடு அவர்களது வாழ்க்கைத்தரத்தையும் பொருளாதார நிலையையும் மேம்படுத்தும் திட்டமாக இது அமைகின்றது.

இதுபோலவே சுயதொழில் வேலைவாய்ப்புக் கடன் திட்டத்தினூடாக - கோழி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, சிறு கைத்தொழில் முயற்சிகள், சிறிய வியாபார முயற்சிகள் போன்றவற்றிற்கு கடன் வசதிகள் வழங்கப்படுகிறது.

அதேவேளை, விவசாயிகளுக்கு உழுபொறிகளைக் கடனாக வழங்கும் கடன் திட்டத்தையும் அண்மையில் அறிமுகப் படுத்தியுள்ளோம். மேலும் 1990 களின் பின் மின்சாரமின்றியும், எரிபொருள் தட்டுப்பாட்டினாலும் வெளிச்சமின்றி வாழ்ந்த வன்னிப்பிரதேச மக்களிற்கு கதிரொளி மின்னாக்கத் தொகுதிகளை (சோலர்) கடனாக வழங்கும் திட்டமொன்றையும் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு புதிதாக இரண்டு கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1. **குத்தகை கடன்** (Leesing)
2. **வீடமைப்புக் கடன்** (Housing Lone)

அத்துடன் தை 14 ஆம் திகதி முழங்காவிலில் வைப்பக கிளை ஒன்று திறக்கப்பட்டுள்ளது. மற்றும் இரண்டாம் கால் ஆண்டில் முல்லைத்தீவிலும் கிளை ஒன்றினை ஆரம்பிக்க உள்ளோம். அத்துடன், கிழக்கு மாகாணத்துடன் மேலும் கிளைகளை விரிவுபடுத்தப்படவுள்ளது.

1996 ஆம் ஆண்டு சித்திரை இடப்பெயர்வுக்கு முன் யாழ்ப்பாணம், நெல்லியடி ஆகிய எமது வங்கிக் கிளைகளில் நகை அடைவு வைத்தவர்களின் நகைகளை, புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் உரிமையாளர்களிடம் 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு பின்பு எந்தவித வட்டியும் அறவிடாமல் ஒப்படைக்கப்பட்டது.

அத்துடன், குறிப்பிட்ட கிளைகளில் வைப்பில் இடப்பட்ட பணத்திற்கான வட்டியினை 1996 ஆம் ஆண்டு ஏப்பிரலுக்கு பின்னர் வாடிக்கையாளர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இதனைக் கொடுத்தபோது வாடிக்கையாளர்கள் மிகவும் மகிழ்வடைந்தார்கள். மேலும் 2004 ஆம் ஆண்டு இறுதிக்குள் தமிழீழ வைப்பகக் கிளைகளுக்குடனான வலையமைப்பு ஒன்று உருவாக்கப்படவுள்ளது. அதனூடாக வாடிக்கையாளர்கள் தங்கள் கணக்கு நடைமுறைகளை இலகுவாக பேணமுடியும்.

எந்தவொரு தேசத்தைப் பொறுத்த வரையிலும் அங்குள்ள



வங்கிகளில் உள்ள வாடிக்கையாளரின் வைப்புக்களிற்கு அந்நாட்டு அரசுகளே உத்தரவாதமளிக்கின்றன. அதுபோல தமிழீழ வைப்பகத்தின் வாடிக்கையாளர்களது வைப்புக்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் முழுமையான உத்தரவாதம் அளிக்கப்படுகின்றது.

அவ்வுத்தரவாதத்துடன் கூடிய வைப்பகப் பணியாளரது கடின உழைப்பினால் வடிக்கையாளர் மத்தியிலும், தமிழ் மக்கள் மத்தியிலும் தமிழீழ வைப்பகத்தின் நம்பிக்கைத் தன்மை நிலை நிறுத்தப்பட்டுள்ளது. என்றுமே எமது போராட்டத்தின் வலுவான சக்தியாக எமது மக்களே விளங்குகின்றனர். தமிழீழ வைப்பகத்தைப் பொறுத்தவரை தற்போது ஏழு (07) கிளைகள் இயங்குகின்றன. இவற்றில் மொத்தமாக முப்பத்தையாயிரம் (35000) இற்கு மேற்பட்டோர் வாடிக்கையாளர்களாக உள்ளனர்.

தற்போதைய மோதல் தவிர்ப்புச் சூழலில் பல்வேறு நாடுகளிலிருந்தும் இங்கு வருகை தருகின்ற புலம்பெயர்ந்தவர்களுக்கான தாயக ஒளி என்னும் பெயரிலான வைப்புத் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் திரட்டப்படவுள்ள நிதி வேளாண்மை, கைத்தொழில், கடற்றொழில் ஆகிய துறைகளில் முதலீடு செய்யப்படவுள்ளது. இத்தாயக ஒளி வைப்புத்திட்டம் அநேக புலம்பெயர்ந்தோரின் வேண்டுகோளுக்கு இணங்கவே ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தினூடாக புலம் பெயர்ந்தவர்கள்



தேசத்தின் மீதும் வைப்பகத்தின் மீதும் கொண்டுள்ள பற்று வெளிப்படுத்தப்படுகின்றது. அதேவேளை இத்திட்டத்தின் மூலம் தேசத்தினது பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்துள்ளது.

தமிழீழ வைப்பகத்தின் ஆளணியைப் பொறுத்தவரை தமிழழ வைப்பகத்தின் ஆட்சேர்ப்புக்கொள்கைக்கு அமைவாகச் சேர்த்துக்கொள்ளப்படுவதுடன், அவ்வாளணி வைப்பகவியல் பயிற்சித்திட்டங்களினூடாகப் பயிற்றுவிக்கப்படுகின்றது.

ரிவிரச இராணுவ நடவடிக்கை காரணமாக 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 19 ஆம் நாள் குடாநாட்டில் இயங்கி வந்த யாழ்ப்பாணம், நெல்லியடிக் கிளைகள் வன்னிப்பகுதிக்கு இடம் நகர்த்தப்பட்டது. இடப்பெயர்வுக் காலத்திலும் மக்களின் நிதித்தேவைகளைப் பூர்த்தி செய்திருந்தது.

குடாநாட்டு வைப்பகக் கிளைகள் வன்னிப்பகுதிக்கு மாற்றப்பட்ட போதும் வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கக் கூடிய இடர்களிற்கு தீர்வு காணும் முயற்சியில் தமிழீழ வைப்பகம் மிகுந்த கவனமெடுத்து அக்கிளைகளைத் தொடர்ந்தும் சிறப்பாகச் செயற்படுத்தியது.

யாழ். குடாநாட்டு மக்களின் மீளப்பெறப்படாத அடைவு நகைக்கடன்கள் காலங்கடந்தபோதும், அந்நகைகள் கடந்த ஏழு ஆண்டுகளாககப் பாதுகாக்கப்பட்டு அக்காலப்பகுதிக்கு வட்டி அறவிடப்படாது, தற்போதைய மோதல் தவிர்ப்புச் சூழலில் மீளளிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் சிறந்த பாதுகாப்பையும், தன்நம்பிக்கையையும் தமிழீழ வைப்பகம் காண்பித்துள்ளது என வாடிக்கையாளர்கள் பாராட்டியுள்ளனர்.

இந்நிறுவனம் தமிழர்களால் தமிழர்களிற்கென தமிழ் மொழியில் உருவாக்கப்பட்ட ஒன்று. எனவே, தமிழீழ வைப்பகத்தின் செயற்பாடுகள் தமிழ் மொழியில் இடம்பெறுவது ஒன்றும் புதிதல்ல. வைப்பகப் பணியுடன் தூய தமிழ்ச் சொற்களைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரும் எமது நோக்கங்களில் ஒன்று இவ்வாறான தமிழ்ச்சொற்களை அழிவிலிருந்து காப்பதற்குத் தமிழீழ வைப்பகம் தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டு வருவதையிட்டுப் பெருமையடைகின்றோம்.

1994 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழீழ வைப்பகம் இன்று தனது பத்தாவது ஆண்டை நிறைவுசெய்து தனது செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்கின்றது. இப்பத்தாண்டு காலத்தில் பல்வேறுபட்ட வைப்பகப் பணிகளை மேற்கொண்டதன் மூலம் எமது தேசத்தின் மேம்பாட்டிற்குத் தமிழீழ வைப்பகம் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளது.

தொடர்ந்தும் இப்பணியைச் சிறப்பாகச் செய்வதற்கு உறுதி பூண்டுள்ளோம். தமிழர்களின் சொத்தான தமிழீழ வைப்பகம் உறுதியான வளர்ச்சி காணுவதன்மூலம் தமிழ்த்தேசியத்தின் பொருண்மிய வல்லமையை தேசம் பெற அனைத்து மக்களும்எம்முடன் இணைந்து நடப்பார்கள் என நம்புகின்றோம். இதனையே தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம் என்னும் தொலைநோக்குச் சிந்தனையூடாக வெளிப்படுத்துகின்றோம்.


**- தமிழீழ வைப்பகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களின் காப்பகமாக திகழும்
தமிழீழ வைப்பகத்தின் சேவை விரிவுற வாழ்த்துகின்றோம்



# சுடர் ஒளி வண்ணச்சோலை



சேர்டிங் - சூட்டிங் - பட்டுச்சேலை - பட்டுவேட்டி வகைகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள், கண்ணாடி பிறேமிங், ஏனைய வீட்டுத் தளபாடப் பொருட்கள் மற்றும் பாடசாலை உள்ளீட்டுப் பொருட்களை மொத்தமாகவும், சில்லறையாகவும், மலிவாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

**சுடர் ஒளி வண்ணச்சோலை**

யாழ்சாலை,
கிளிநொச்சி.
(நீதிமன்றம் முன்பாக)

(சி/2565)

கிளை:
சில்வா வீதி,
வட்டக்கச்சி.

---

தமிழ் மக்களின் நம்பிக்கைச்சின்னம் தமிழீழ வைப்பகத்தின்
மக்கள் பணி தொடர எமது வாழ்த்துக்கள்



# சிவா வர்த்தக நிலையம்

பலசரக்குப் பொருட்கள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

சிவா வர்த்தக நிலையம்
யாழ் வீதி,
கிளிநொச்சி.

உரிமையாளர்
க.தங்கராசா

(சி/2566)

SIVA TRADING CO.
JAFFNA ROAD,
KILINOCHCHI

---

சகாப்தம் கடந்த பணி புது சகாப்தம் காண வாழ்த்துக்கள்

# சிவம் இரும்புத் தொழிலகம்

(சிவா கராஜ்)

- கேட்
- கிறில்
- சுருக்குக்கேட்
- இரும்புக்கூரை
- உழவு இயந்திரப்பெட்டி
- உழவு இயந்திர வேலைகள்

அனைத்தையும் விரைவாகவும் உத்தரவாதத்துடனும்
செய்துகொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

(சி/2567)

**சிவா இரும்புத் தொழிலகம்**


யாழ்சாலை,
கிளிநொச்சி.

---

சகாப்தம் கடந்த பணி புது சகாப்தம் காண வாழ்த்துக்கள்

பாலர் வகுப்பு முதல் பட்டதாரிகளுக்கான பாடப்புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள், நாவல்கள், காகிதாதிகள், எழுதுபொருட்கள் மற்றும் றபர் ஸ்ராம்ப், போட்டோபிரதிகள், புதினப்பத்திரிகைகள், லெமினேற்றிங் போன்றவற்றை
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

# பிள்ளையார் பொத்தகசாலை



கண்டி வீதி,
கிளிநொச்சி.

(சி/2569)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழ மண்ணின் பொருண்மிய கட்டுமானத்தில்
தமிழீழ வைப்பகத்தின் பணி சிறக்க வாழ்த்துக்கள்



- உள்நாட்டு, வெளிநாட்டு உணவு வகைகள்
- குளிர்பான வகைகள்
- கிளியரசன் (ஐஸ்கிறீம்) குளிர்களி

# கிளியரசன் சுவையகம்



யாழ் வீதி (நீதிமன்றம் முன்பாக),
கிளிநொச்சி.
T.P: 228 5783

(சி/2568)

---

தமிழீழ மண்ணின் பொருண்மிய கட்டுமானத்தில்
தமிழீழ வைப்பகத்தின் பணி சிறக்க வாழ்த்துக்கள்

உங்கள் கட்டுமானப் பணிகளுக்கு, கட்டடப் பொருட்களை பெற்றுக்கொள்ள ராசியான ஸ்தாபனம்.

# அண்ணா இரும்பு வாணிபம்.

கண்டி வீதி,
கிளிநொச்சி

(சி/2570)

---

தமிழ் மக்களின் காப்பகமாக திகழும்
தமிழீழ வைப்பகத்தின் சேவை விரிவுற வாழ்த்துகின்றோம்

உங்களுக்குத் தேவையான சகல விதமான கட்டட நிர்மாணப் பொருட்கள், உழவு இயந்திர உதிரிப் பாகங்கள், எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்.

# இளவேனில் வாணிபம்

யாழ்சாலை
கிளிநொச்சி.
T.P: 228 5892

(சி/2571)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தலைவன் தோற்றுவித்த வைப்பகத்தின் பணிவளர்க

தமிழீழ வைப்பகம்
BANK OF TAMILEELAM



மக்கள் சேவையிலே
மகத்தான பணிபுரிந்து
பத்தாண்டு விழாக்காணும்
தமிழீழ வைப்பகமே

வரலாறு படைத்திடும்
பெருந்தலைவன் தோற்றுவித்த
வைப்பகத்தின் பணிவளர்ந்து
பத்தாண்டு ஆனதுவே

வரலாறு முதற்கொண்டு
வாழ்வு பெருக்கிடும்
சிந்தனையில் முன்னின்றார்
வாழ்வு பெருக்கிட
வந்துதித்தாய் வாழ்த்துகிறோம்

சொத்துச் சுகந்தேடும்
தமிழர் கனவுகளை
நினைவாகச் செய்திடுவாய்
நின்புகழ் பெருகிடுமே.



(2573)

**எஸ்.வி.முருகேசு**
**154 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தொ.பே.இல.: 0212222991, 021 222 2911
தொ.நகல்: 021 222 2202

---

# தமிழிற்கு உயிர்சேர்க்கும்
# தமிழரின் காப்பகமாம்
# தமிழீழ வைப்பகத்தின்
# பத்தாம் ஆண்டுதனில்
# பல்லாண்டு வாழியவே!

10 ஆம் ஆண்டில் தமிழீழ வைப்பகம்

தமிழீழ வைப்பகம்
BANK OF TAMILEELAM



## பல்துறை முன்னோடி விற்பனை நிறுவனம்

சேரன்

# சேரன் வாணிபம்

**மாஞ்சோலை, கிளிநொச்சி.**

(சி-2577)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org